بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

இதழ் 27

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1448 - முஹர்ரம் 16

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - வஃபா 02 ★02 ஜூலை 2026

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰہَ وَمَلٰٓئِکَتَہٗ یُصَلُّوۡنَ عَلَی النَّبِیِّ ؕ یٰۤاَیُّہَا الَّذِیۡنَ اٰمَنُوۡا صَلُّوۡا عَلَیۡہِ وَسَلِّمُوۡا تَسۡلِیۡمًا

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் பொழியுமாறும் சாந்தியும், சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள். (அல் அஹ்ஸாப் : 57)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

நபிமொழி

## துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு 'துரூத் ஷரீஃப்' அவசியமாகும்

عَنْ فَضَالَةَ بْنِ عُبَيْدٍ، قَالَ: بَيْنَا رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَاعِدًا إِذْ دَخَلَ رَجُلٌ فَصَلَّى، فَقَالَ: اللَّهُمَّ اغْفِرْ لِي وَارْحَمْنِي، فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: "عَجِلْتَ أَيُّهَا الْمُصَلِّي، إِذَا صَلَّيْتَ فَقَعَدْتَ فَاحْمَدِ اللَّهَ بِمَا هُوَ أَهْلُهُ، وَصَلِّ عَلَيَّ ثُمَّ ادْعُهُ". قَالَ: ثُمَّ صَلَّى رَجُلٌ آخَرُ بَعْدَ ذَلِكَ، فَحَمِدَ اللَّهَ وَصَلَّى عَلَى النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَقَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: "أَيُّهَا الْمُصَلِّي ادْعُ تُجَبْ". قَالَ أَبُو عِيسَى: وَهَذَا حَدِيثٌ حَسَنٌ، وَقَدْ رَوَاهُ حَيْوَةُ بْنُ شُرَيْحٍ، عَنْ أَبِي هَانِئٍ الْخَوْلَانِيِّ، وَأَبُو هَانِئٍ اسْمُهُ حُمَيْدُ بْنُ هَانِئٍ، وَأَبُو عَلِيٍّ الْجَنْبِيُّ اسْمُهُ عَمْرُو بْنُ مَالِكٍ.

ஃபழாலா பின் உபைது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தபோது, ஒருவர் உள்ளே வந்து தொழுதார். பிறகு அவர் துஆ செய்தவாறு கூறினார்: اَللّٰهُمَّ اغْفِرْلِیْ وَارْحَمْنِیْ பொருள்: 'அல்லாஹ்வே! என்னை மன்னித்து என் மீது கருணை புரிவாயாக!'. இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'தொழுபவரே! நீர் அவசரப்பட்டுவிட்டீர். நீர் தொழுது அமர்ந்தால், அல்லாஹ்வைப் புகழும்; பின்னர் என் மீது ஸலவாத் ஓதும்; பிறகு விரும்பிய துஆவை செய்து கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார்: பின்னர் மற்றொரு நபர் வந்தார்; அவர் அல்லாஹ்வைப் புகழ்ந்தார்; மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதினார். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் اَيُّهَا الْمُصَلِّيْ اُدْعُ تُجَبْ என்று கூறினார்கள். பொருள்: 'தொழுபவரே! துஆ செய்யுங்கள்; துஆ ஏற்றுக் கொள்ளப்படும்' என்று கூறினார்கள். (ஆதாரம்: சுனன் திர்மிதி, ஹதீஸ் எண்: 3476)

* * * * * * * * * *

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

## ஹுஸைன் (ரலி) களங்கமற்றவராகவும் தூய்மையாளராகவும் இருந்தார் நிச்சயமாக அவர் சொர்க்கவாசிகளின் தலைவர்களைச் சார்ந்தவர் ஆவார்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

யஸீத் ஒரு அசுத்தமான குணம் கொண்டவன் என்றும், அவன் உலகத்தின் புழு என்றும், கொடுங்கோலன் என்றும் நாம் நம்புகிறோம். எந்த அர்த்தங்களின் அடிப்படையில் ஒருவர் நம்பிக்கையாளர் என்று அழைக்கப்படுகிறாரோ அந்தப் பண்பும் அவனிடம் இருந்திருக்கவில்லை. நம்பிக்கையாளர் ஆகுவது ஒன்றும் எளிதான காரியமல்ல.

قَالَتِ الْاَعْرَابُ اٰمَنَّا ؕ قُلْ لَّمْ تُؤْمِنُوْا وَلٰكِنْ قُوْلُوْۤا اَسْلَمْنَا

என்று இத்தகைய நபர்களைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்: (அல்குர்ஆன் 49:15)

நம்பிக்கையாளர்கள் என்பவர் யாரென்றால் அவர்களது உள்ளத்தில் ஈமான் எழுதப்பட்டிருக்கின்றது; மேலும், அவர்கள் தமது இறைவனுக்கும், அவனது விருப்பத்திற்கும் எல்லாவற்றையும் விட முன்னுரிமை வழங்குகின்றனர்; அவர்கள் இறையச்சத்தின் நுணுக்கமான மற்றும் குறுகலான வழிகளை இறைவனுக்காகத் மேற்கொள்கின்றனர். அவர்கள் இறைவனின் அன்பில் மூழ்கி விடுகின்றார்கள். சிலைகளைப் போன்று எந்த விஷயமெல்லாம் இறைவனை விட்டுத் தடுக்கிறதோ, ஒழுக்க நிலையாக இருந்தாலும் சரி! அல்லது தீய செயல்களாக இருந்தாலும் சரி! அல்லது கவனக்குறைவாக இருந்தாலும், மற்றும் சோம்பலாக இருந்தாலும் சரி! ; அவை அனைத்திலிருந்தும் அவர்கள் தங்களைத் விலக்கிக் கொள்கிறார்கள். ஆனால், நற்பேறு கெட்ட யஸீதுக்கு இந்தப் பண்புகள் எங்கே கிடைத்திருந்தன? உலக நேசம் அவனை குருடாக்கிவிட்டது. ஆனால், ஹுஸைன் (ரலி) முற்றிலும் பரிசுத்தமானவராக இருந்தார். மேலும், சந்தேகத்திற்கு இடமின்றி அல்லாஹ் எவர்களை தனது கைகளால் தூய்மைப்படுத்தி, தனது அன்பினால் நிரப்புகின்றானோ அத்தகைய தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவராக இருந்தார். நிச்சயமாக அவர் சொர்க்கத்தின் தலைவர்களைச் சார்ந்தவராவார். அவர் மீது சிறிதளவு பகைமை கொள்வது கூட ஈமானை பறிப்பதற்கு காரணியாகிவிடும். மேலும், அந்த இமாமின் இறையச்சமும், இறை நேசமும், பொறுமையும், உறுதிப்பாடும், தூய்மையும், இறை வணக்கமும் நமக்கு அழகிய முன்மாதிரியாகும்.'

(மஜ்மூஆ இஷ்திஹாரத், தொகுதி 3, பக்கம் 548 முதல் 550 வரை, இஷ்திஹார் எண் 263, அஷ்-ஷிர்கதுல் இஸ்லாமியா ரப்வா).

அன்னார் (அலை) தம்முடைய பாரசீகக் கவிதையில் கூறுகின்றார்கள்: 'ஜான் வ திலம் ஃபிதாயே ஜமாலே முஹம்மத் அஸ்த்,
காகம்-நிஸாரே கூச்சாயே ஆலி முஹம்மத் அஸ்த்

(பொருள்: எனது உயிரும் உள்ளமும் முஹம்மது (ஸல்) அவர்களின் அழகில் அர்ப்பணமாகிவிட்டது, நான் முஹம்மது (ஸல்) அவர்களின் குடும்பத்தாரின் தெருவின் தூசியாவேன். (துர்ரே ஸமீன் ஃபார்ஸி - பக்கம் 89)

* * * * * * * * * * *

முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பொன்மொழிகள்

## இறைவன் இமாம் ஹுஸைனுக்காக பழிவாங்கினான்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

வரலாற்று நிகழ்வுகளிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், கர்பலா சம்பவத்திற்குப் பிறகு, இமாம் ஹுஸைனை (ரலி) அவர்களின் கொலையாளிகளை அல்லாஹ் தனது பிடியில் எடுத்து விட்டான்; அவர்களுக்கு படிப்பினைக்குரிய தண்டனைகளை வழங்கினான். ஆனால், இறை வல்லமையின் பழிவாங்கும் ஒரு வழிமுறை என்னவென்றால்,கொடுங்கோலனின் சந்ததியே தனது முன்னோர்களின் அக்கிரமங்களையும், தவறுகளையும் ஒப்புக்கொண்டு, அவர்களின் பிரதிநிதித்துவத்தை நிராகரித்து விடுகிறது.

யஸீதின் மரணத்திற்குப் பிறகு இது போன்ற நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமது 'கிலாஃபத்தே ராஷிதா' என்ற புத்தகத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

'யஸீது மரணித்தப் பிறகு, அவனது மகன் அரியணையில் அமர்ந்தார். அவரது பெயரும் அவரது தந்தை வழிப் பாட்டனாரின் பெயரான முஆவியா என்பதாகவே இருந்தது. அவர் மக்களிடம் பைஅத் வாங்கிய பிறகு,தனது வீட்டிற்குள் சென்றுவிட்டார். மேலும் நாற்பது நாட்கள் வரை வெளியே வரவில்லை. பிறகு ஒரு நாள் அவர் வெளியே வந்து, மேடையில் ஏறி நின்று மக்களிடம் கூறினார்; 'நான் உங்களிடம் எனது கைகளில் பைஅத் வாங்கியுள்ளேன்; ஆயினும், நான் உங்களிடம் பைஅத் வாங்குவதற்கு தகுதியானவன் என்று கருதியதால் வாங்கவில்லை. மாறாக, உங்களிடம் பிரிவினை உருவாகி விடக் கூடாது என்று விரும்பிய காரணத்தால்

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றிலிருந்து**
**வாய்மை மற்றும் நேர்மை**
**எனும் ஒளிமயமான அம்சம்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 மே 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **08 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை எடுத்துரைக்கும்போது, அன்னாரின் உண்மைத்தன்மையின் தரம் குறித்த சில ஆதாரங்களையும் சம்பவங்களையும் எடுத்துரைத்திருந்தேன். இன்றும் சில சம்பவங்களை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது டாக்டர் ஹென்றி மார்ட்டின் கிளார்க் என்பவரால் ஒரு வழக்குத் தொடரப்பட்டது. அது கொலை முயற்சி தொடர்பான வழக்காகும். அது மிகவும் ஆபத்தான ஒரு வழக்காக இருந்தது

. இது குறித்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

‘ ஹென்றி மார்ட்டின் கிளார்க்கின் இந்த வழக்கு எந்த அளவுக்கு அபாயகரமானதாக இருந்தது என்றால், இதில் தூக்குத்தண்டனை கூட விதிக்கப்பட வாய்ப்பிருந்தது.‘

இதற்கு உதாரணமாக, யூதர்களால் ரோமானிய நீதிமன்றத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

‘இத்தகையதொரு வழக்கு என் மீதும் தொடரப்பட்டது. ஈஸா (அலை) அவர்களுக்கு எதிராக யூதர்கள் வழக்குத் தொடர்ந்தனர். ஆனால் இந்த ஆட்சியில் எனக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர் ஒரு மதிப்பிற்குரிய பாதிரியாரும், டாக்டரும் ஆவார். அதாவது, டாக்டர் மார்ட்டின் கிளார்க் என்பவர் என் மீது கொலை முயற்சி வழக்கைப் பதிவு செய்தார். இதற்காக அவர் முழுமையான சாட்சியங்களைத் திரட்டினார். இந்த இயக்கத்தின் கடும் எதிரியான மவ்லவி அபூ ஸயீத் முஹம்மது ஹுஸைன் படால்வி கூட நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்தார். அவர் என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு எனக்கு எதிராகச் சாட்சியம் அளித்து, வழக்கை முழுமையாக எனக்கு எதிராக நிரூபிக்க முயற்சி செய்தார்.

இந்த வழக்கு குர்தாஸ்பூர் Deputy Commissioner கேப்டன் டக்ளஸ் அவர்களின் நீதிமன்றத்தில் நடந்தது. தற்போது அவர் சிம்லாவிற்கு மாற்றலாகி இருக்கலாம். எவ்வாறிருப்பினும், அவருக்கு முன்பாக வழக்கு முழுமையாகத் தயார் நிலையில் இருந்தது. எனக்கு எதிராக மிகத் தீவிரமாகவும், அழுத்தமாகவும் அனைத்துச் சாட்சியங்களும் எடுத்துரைக்கப்பட்டன. இத்தகையதொரு சூழலில், நான் இந்த வழக்கிலிருந்து விடுதலையாவேன் என்று எந்தவொரு சட்ட நிபுணரோ அல்லது ஆலோசகரோ கூற முடியாத நிலை இருந்தது. அந்த நேரத்தின் தேவையும் சூழ்நிலையும் நான் செஷன்ஸ் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு அங்கிருந்து தூக்குத்தண்டனையோ அல்லது அந்தமானுக்கு நாடு கடத்தப்படும் ஆயுள் தண்டனையோ விதிக்கப்படக் கூடிய நிலையிலேயே இருந்தன.

ஆனால், இந்த வழக்கிற்கு முன்பே அல்லாஹ் எனக்குத் தகவல் அளித்திருந்ததைப் போலவே, நான் இதிலிருந்து விடுதலையாவேன் என்பதையும் அவன் முன்கூட்டியே வெளிப்படுத்தியிருந்தான். இந்த முன்னறிவிப்பு எனது ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்குத் தெரிந்திருந்தது. சுருக்கமாகச் சொன்னால், வழக்கு இறுதி நிலையை எட்டியபோது, நீதிபதி என்னை செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிடுவார் என்று எதிரிகளும் எதிர்ப்பாளர்களும் எண்ணிக் கொண்டிருந்த வேளையில், கேப்டன் டக்ளஸ் அவர்கள் காவல்துறை கண்காணிப்பாளரிடம், இந்த வழக்கு இட்டுக்கட்டப்பட்டது என்று எனது உள்ளம் கூறுகிறது என்று கூறினார்.

நீதிபதியாக இருந்த டக்ளஸ் சாஹிபிற்கு இதில் நம்பிக்கை ஏற்படவில்லை.

‘ உண்மையிலேயே இத்தகைய முயற்சி செய்யப்பட்டிருக்கும் என்பதையோ, டாக்டர் கிளார்க்கைக் கொலை செய்ய அவர் ஆள் அனுப்பியிருப்பார் என்பதையோ எனது உள்ளம் ஏற்கவில்லை. நீங்கள் இதனை மீண்டும் விசாரணை செய்யுங்கள் என்று கூறினார்.

மீண்டும் விசாரணை செய்யும்படி காவல்துறை கமாண்டரிடம் கூறுமாறு அந்த நீதிபதியின் உள்ளத்தில் அல்லாஹ்வே இதனைப் போட்டான்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: ‘அந்தக் காலகட்டத்தில் எனது எதிரிகள் எனக்கு எதிராகச் சூழ்ச்சிகள் செய்வதில் மட்டும் ஈடுபடவில்லை; மாறாக, தமது துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படும் என்று வாதிட்டவர்கள் கூட எனக்கு எதிராகத் துஆக்களில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் வெறும் முயற்சிகளை மட்டும் செய்யவில்லை, மாறாக துஆக்களையும் செய்து கொண்டிருந்தார்கள்.

நான் தண்டனை பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் அழுதழுது துஆ செய்தார்கள். ஆனால் இறைவனுக்கு எதிராக யாரால் நிற்க முடியும்? கேப்டன் டக்ளஸ் ஸாஹிபிடம் சில பரிந்துரைகள் வந்தன என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் அவர் நீதியை விரும்பும் ஒரு நீதிபதியாக இருந்தார். இத்தகைய இழிவான காரியத்தை என்னால் செய்ய முடியாது என்று அவர் கூறிவிட்டார். அதாவது, ஒரு தவறான தீர்ப்பை என்னால் வழங்க முடியாது என்று அவர் கூறிவிட்டார்.

சுருக்கமாகச் சொன்னால், இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்காக கேப்டன் லெமார்ச்சண்ட் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டபோது, கேப்டன் சாஹிப், அப்துல் ஹமீது என்பவரை அழைத்து, உண்மையைச் சொல் என்று கூறினார். அப்போது அப்துல் ஹமீது, தான் ஏற்கனவே துணை ஆணையரிடம் கூறியிருந்த அதே கதையையே மீண்டும் கூறினார். சிறிது முரண்பாடாகப் பேசினாலும் நீ மாட்டிக்கொள்வாய்! என்று அவருக்கு ஏற்கனவே (எதிர்த்தரப்பினரால்) கூறப்பட்டிருந்ததால், அவர் அதையே தொடர்ந்து கூறி வந்தார்.

ஆனால் கேப்டன் அவரிடம், நீ ஏற்கனவே இதையேதான் கூறினாய்; ஆனால் நீதிபதி இதில் திருப்தி அடையவில்லை; ஏனெனில் நீ உண்மையைச் சொல்லவில்லை என்று கூறினார். கேப்டன் லெமார்ச்சண்ட் மீண்டும் அவரிடம் கூறியபோது, அவர் அழுதுகொண்டே அவரது காலில் விழுந்து, என்னைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டினார். கேப்டன் அவருக்கு ஆறுதல் கூறி, உண்மையைக் கூறு என்றார்.

அப்போது அவர் உண்மையை கூறினார். என்னை மிரட்டித்தான் இந்த வாக்குமூலத்தை கூறச் செய்தார்கள். மிர்ஸா ஸாஹிப் அவர்கள் என்னை ஒருபோதும் கொலை செய்ய அனுப்பவில்லை என்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். இந்த வாக்குமூலத்தை கேட்டதும் கேப்டன் மகிழ்ச்சியடைந்து, நாங்கள் வழக்கின் உண்மையை வெளிக்கொண்டு வந்துவிட்டோம் என்று துணை ஆணையருக்குத் தந்தி அனுப்பினார்.

அதன்படி, மீண்டும் குர்தாஸ்பூரில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அங்கு கேப்டன் லெமார்ச்சண்ட் சத்தியப்பிரமாணம் செய்து தனது வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அந்த நேரத்தில், நீதிமன்றத்தில் உண்மை வெளிப்பட்டதைக் கண்டு துணை ஆணையர் மிகவும் மகிழ்ச்சியடைந்ததையும், எனக்கு எதிராகப் பொய் சாட்சியம் அளித்த அந்த கிறித்தவர்கள் மீது அவர் கடும் கோபம் கொண்டிருப்பதையும் நான் கண்டேன். அந்த கிறித்தவர்கள் மீது தாங்கள் வழக்குத் தொடர முடியும் என்று அவர் என்னிடம் கூறினார். ஆனால் நான் வழக்கு நடத்துவதை விரும்பாத காரணத்தால், நான் வழக்குத் தொடர விரும்பவில்லை; எனது வழக்கு வானத்தில் தொடரப்பட்டுள்ளது என்று கூறினேன்.

அதன் பிறகு டக்ளஸ் ஸாஹிப் அப்போதே தீர்ப்பை எழுதினார். அன்று அங்கு ஒரு பெரும் கூட்டமே கூடியிருந்தது. அவர் தீர்ப்பை வாசித்தவாறு, உங்களுக்கு வாழ்த்துகள்! நீங்கள் விடுதலையானீர்கள்! என்று என்னிடம் கூறினார். அந்த நேரத்தில் ஓர் உலகமே எனக்கு எதிரியாக இருந்ததைக் கண்டேன். உலகம் ஒருவருக்குத் துன்பம் தர முனையும்போது, அந்தச் சூழலில் சுவர்களும், கதவுகளும் கூட காயப்படுத்தத் தொடங்குவது வழக்கம். ஆனால் அத்தகைய நேரத்தில் இறைவன்தான் தனது உண்மையான அடியார்களைக் காப்பாற்றுகிறான். நான் உண்மையாளனாக இருந்ததால் அல்லாஹ் என்னைக் காப்பாற்றினான். (நூல்-லெக்சர் லூதியானா, ரூஹானி கஸாயீன், தொகுதி 20, பக்கம் 268 - 270)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நேர்மையையும் உயர்ந்த ஒழுக்கத்தையும் பற்றி இந்த வழக்கில் ஆஜரான ஒரு

தாங்கள் நீதிமன்றத்தில் எனக்கு அப்துல் ஹமீதை யாரென்றே தெரியாது என்று மட்டும் கூறுங்கள்; அதற்குப் பிறகு மற்ற விஷயங்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்; அவரை எனக்குத் தெரியாது என்று மட்டும் தாங்கள் வாக்குமூலம் கொடுங்கள் என்று கூறினார்.

ஹூஸீர் (அலை) அவர்களிடம், இவ்வாறு வாக்குமூலம் அளித்தால் மட்டுமே வெற்றி நிச்சயம்; இல்லையெனில் விடுதலையாவது சாத்தியமற்றது என்று நாங்கள் அன்னாருக்கு எல்லா விதத்திலும் உறுதி அளித்தோம் என்று மர்ஹூம் வக்கீல் சாஹிப் கூறினார். ஆனால், எங்களது அனைத்து ஆலோசனைகளையும் கேட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நான் உலகில் உண்மையை நிலைநாட்டவே வந்துள்ளேன். எனக்குத் தூக்குத் தண்டனை கிடைத்தாலும் சரி! நான் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டேன். எனக்கு அப்துல் ஹமீதை தெரியும். அவர் காதியானுக்கு வந்து செல்வார். என்ன நடந்தாலும் சரி! அவரைத் தெரியாது என்று என்னால் மறுக்க முடியாது என்று கூறினார்கள்.

மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் மர்ஹூம் கூறுகிறார்:

நாங்கள் அன்னாரிடம், உயிரைக் காத்துக்கொள்வது கடமையாகும்; எனவே தாங்கள் பொய் சொல்ல விரும்பவில்லை என்றால், குறைந்தபட்சம் அவரைத் தெரியும் என்று நேரடியாகச் சொல்லாமல், ஒரு தெளிவற்ற மழுப்பலான பதிலை அளிக்கலாமே என்று ஆலோசனை வழங்கினோம். அதற்கு ஹூஸீர் (அலை) அவர்கள், என்னால் அவ்வாறும் செய்ய முடியாது; இறைவன் என்னை உலகுக்கு முன்மாதிரியாகத் திகழவே அனுப்பியுள்ளான். உயிரைக் காப்பாற்றுவதற்காக இத்தகையதொரு முன்மாதிரியை வழங்க நான் தயாராக இல்லை. உண்மையைச் சொல்லுவதால் எமது உயிர் போனாலும் சரி! அப்போதும் நாம் வெற்றி பெற்றுவிட்டோம் என்று பதிலளித்தார்கள்.

அஹ்மதியல்லாத மவ்லவி ஃபஸ்ல் தீன் ஸாஹிப் மர்ஹூம் கூறுகிறார்: அந்த நேரத்தில் நாங்கள் முற்றிலும் நம்பிக்கையிழந்தோம். ஹூஸீர் (அலை) அவர்கள் நீதிமன்றத்தில் தமது வாக்குமூலத்தை அளித்தபோது, எனக்கு அப்துல் ஹமீதைத் தெரியும் என்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டார்கள். இதைக் கேட்டதும் இனி விடுதலையாவது சாத்தியமில்லை என்று நாங்கள் உறுதியாக நம்பினோம். ஆனால், அந்த வழக்கில் ஹூஸீர் (அலை) அவர்களுக்குக் கிடைத்த இறை உதவி எங்களை வியப்பில் ஆழ்த்தியது. இறைவன் தன்னால் அனுப்பப்பட்டவருக்கு எவ்வாறு உதவினான் என்பதையும், அத்தகைய ஒரு கடுமையான வழக்கிலிருந்து அன்னார் (அலை) எவ்வாறு கண்ணியமான முறையில் விடுதலையானார்கள் என்பதையும் கண்டு நாங்கள் ஆச்சரியமடைந்தோம்.

(ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 173-174)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

‘ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் அறுக்கப்பட்டார்கள். ஆனால் உண்மையைச் சொல்வதிலிருந்து அவர்கள் பின்வாங்கவில்லை. அவர்கள் நாட்டைக் கைப்பற்றிய விதத்திற்கு நிகர் ஏதுமில்லை. இதற்கு என்ன காரணம்? அவர்களிடம் தூய்மையும், உண்மையும், நன்றியுணர்வும் இருந்தது. சூழ்நிலைக்கு ஏற்ப வளைந்து கொடுப்பவர்கள் நாத்திகர்கள் ஆவர்.

யார் அல்லாஹ்வின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு, இறைவனுக்காக ஒரு விஷயத்தை பேசுகிறார்களோ, இறைவனின் உதவி நிச்சயமாக வரும் என்பதை அவர்கள் அறிவார்கள்; எனவே அவர்கள் அதற்கெதிராக நடப்பதில்லை. இறை அடியார்கள் உண்மையைச் சொல்வதை விட்டு ஒருபோதும் பொய் சொல்ல மாட்டார்கள். 'நீர் மஸீஹ் மவ்வூது என்று வாதிடுகிறீரே'? என்று என்னிடம் கேட்கப்பட்டால், அதற்கு எனது பதில் என்னவென்பதையும் நான் சொல்கிறேன்: உண்மை மற்றும் ஆண்மை மிக்க துணிச்சலின்றி எதுவும் சாத்தியமில்லை. எம் மீது எத்தனையோ வழக்குகள் தொடரப்பட்டன; ஆனால் அவற்றின் முடிவு என்னவானது? இவற்றுக்கெல்லாம் அஞ்சி நாம் பின்வாங்குவோம் என்று எவராவது கூற முடியுமா? அவ்வாறு அஞ்சுவது ஷிர்க் ஆகும்.

இறைவன் இருக்கிறான் என்பதையும், அவன் தனது தூய அடியார்களுக்கு உதவி செய்கிறான் என்பதையும் நான் உறுதியாக நம்புகிறேன். எவர் உண்மையான உள்ளத்துடன் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுகிறாரோ, அவருடன் அல்லாஹ் இருக்கிறான் என்று நான் உண்மையாகக் கூறுகிறேன். இத்தகைய உன்னதப் பண்பை உருவாக்கும் ஒரே மார்க்கம் இஸ்லாம் மட்டுமே ஆகும். (மல்ஃபூஸாத், தொகுதி 9, பக்கம் 254, 2022-ம் ஆண்டு பதிப்பு)

இது அன்னாருக்கு மட்டுமே உரியதா? என்று கேட்டால், 'இல்லை, இது அனைவருக்கும் உரியது.

யார் உண்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வை நம்புகிறாரோ அவர் காப்பாற்றப்படுவார்' என்று அன்னார் (அலை) கூறினார்கள். ஹூஸீர் (அலை) அவர்களைச் சிறு வயது முதலே அறிந்த ஓர் இந்து நபரின் சாட்சியமும் இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் கூறுகிறார்:

'நான் மிர்ஸா குலாம் அஹ்மத் அவர்களைச் சிறுவயதிலிருந்தே பார்த்திருக்கிறேன். நாங்கள் சம வயதினர். காதியானுக்கு நான் எப்போதும் வந்து போவதுண்டு. அன்னாரிடம் இப்போது இருக்கும் அதே சிறந்த குணங்களும், நற்பண்புகளும் அன்றும் இருந்தன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்வைக் குறித்து அவர் கூறுகிறார்.

அன்னார் (அலை) ஓர் உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர் மற்றும் நல்லவர். இறைவன் மிர்ஸா ஸாஹிபின் உருவத்தில் பூமிக்கு இறங்கி வந்திருப்பதாகவும், இறைவன் தனது திருக்காட்சிகளை அன்னார் (அலை) மூலமாக வெளிப்படுத்துவதாகவும் நான் கருதுகிறேன்.‘

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூத்த மகன் மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் இவ்வாறு எழுதுகிறார்கள்:

தந்தையார் எப்போதும் மார்க்க பணிகளிலேயே மூழ்கியிருப்பார்கள். குடும்பத்தினர் அன்னார் (அலை) மீது முழுமையான நம்பிக்கை வைத்திருந்தனர். கிராம மக்களுக்கும் அன்னார் (அலை) மீது முழுமையான நம்பிக்கை இருந்தது. பொதுவாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக இருந்த பங்குதாரர்கள் கூட, அன்னாரின் நற்பண்புகள் மீது எந்தளவு நம்பிக்கை கொண்டிருந்தனர் என்றால், ஏதேனும் பிரச்சனை ஏற்படும் போது அன்னார் (அலை) எதைச் சொன்னாலும் எங்களுக்குச் சம்மதம் என்று கூறிவிடுவார்கள். ஒவ்வொருவரும் அன்னாரை ஒரு நம்பிக்கைக்குரியவராகவும், உண்மையாளராகவுமே அறிந்திருந்தனர்.(ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பக்கம் 200, அறிவிப்பு எண்: 186)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி அன்னாரது தந்தையார், இவரது வாழ்க்கை எவ்வாறு கழியும். இவரால் சொத்துக்களைப் பராமரிக்கவும் முடியாது; வேலைக்குச் செல்லவும் விருப்பம் இல்லை என்று கவலைப்படுவார்கள். அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த ஒரு சீக்கியர் இருந்தார். அவரது இரு மகன்களும் எனது பாட்டனாரை சந்திக்க வருவதுண்டு. அவர்களில் ஒருவர் என்னிடம் ஒரு சம்பவத்தைக் கூறினார்;

ஒருமுறை பெரிய மிர்ஸா ஸாஹிப் என்னிடம், 'நீ போய் குலாம் அஹ்மதிடம் பேசு. அவர் உனது வயதுடையவர் தான். அவருக்குப் புரிய வை! அவரால் சொத்துக்களைக் கவனிக்க முடியாவிட்டால் நான் அவருக்கு ஏதேனும் வேலையை வாங்கித் தருகிறேன் என்று கூறினார்கள். நான் அன்னாரிடம் சென்று, 'உங்கள் தந்தை உங்கள் மீது கோபமாக இருக்கிறார்கள்; நீங்கள் எந்த வேலையும் செய்யாமல் இருக்கிறீர்கள் என்றும், ஆயுள் முழுவதும் சகோதரரின் சம்பாத்தியத்திலேயேவா இருக்கப் போகிறீர்கள் என்றும், தாம் சென்ற பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களுக்கு விருப்பம் இருந்தால் ஏதேனும் வேலைக்கு ஏற்பாடு செய்கிறேன் என்றும் அவர்கள் சொல்லச் சொன்னார்கள் என்றேன்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், தந்தையார் வீணாகக் கவலைப்படுகிறார். நான் யாருடைய ஊழியனாக ஆக வேண்டுமோ, அவனிடம் ஊழியனாக ஆகிவிட்டேன் என்று கூறிவிடுங்கள் என்றார்கள். பாட்டனார் உலக விஷயங்களில் நாட்டம் கொண்டவராக இருந்தபோதிலும் - அந்த சீக்கியர் கூறுகிறார்: -

நான் அன்னாருடைய தந்தையிடம் அன்னாருடைய பதிலை சொன்னபோது, அவர்கள் மௌனமாகிவிட்டார்கள். பிறகு, எனது மகன் மிர்ஸா குலாம் அஹ்மத் இவ்வாறு கூறியிருந்தால், அது உண்மையாகத்தான் இருக்கும்; அவர் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. இந்தச் சம்பவத்தை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. 1916-ல் அகில இந்திய YMCA செயலாளராக இருந்த Mr. வால்ட்டர் அவர்கள், அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி ஆய்வு செய்வதற்காகக் காதியானுக்கு வந்திருந்தார். அப்போது அஹ்மதிய்யா இயக்கத் தோற்றுனரின் ஏதேனும் ஒரு பழைய ஸஹாபியை சந்திக்க வேண்டும் என்று அவர் விருப்பம் தெரிவித்தார்.

அக்காலத்தில் மர்ஹூம் முன்ஷி அரோடா சாஹிப் அவர்கள் காதியானில் இருந்தார்கள். Mr. வால்ட்டர் அவர்கள் முன்ஷி ஸாஹிபை மஸ்ஜித் முபாரக்கில் சந்தித்தார். Mr. வால்ட்டர் முன்ஷி சாஹிபிடம் சம்பிரதாய உரையாடலுக்குப் பிறகு, மிர்ஸா ஸாஹிப் அவர்களின் உண்மைத்தன்மையை ஏற்பதற்கு எந்த ஆதாரம் உங்களை அதிகம் ஈர்த்தது என்று கேட்டார்.

அதற்கு, நான் அதிகம் படித்தவன் அல்ல. எனக்குப் பெரிய அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் தெரியாது. ஆனால் என்னை மிகவும் கவர்ந்தது ஹஸ்ரத் சாஹிப் அவர்களின் ஆளுமைதான். அன்னாருடைய ஆளுமையை விடச் சிறந்த ஓர் உண்மையாளரையோ, அதிக நேர்மையானவரையோ, இறைவன் மீது அதிக நம்பிக்கை கொண்ட ஒருவரையோ நான் பார்த்ததே இல்லை. அன்னாரைப் பார்த்தாலே, இவர் ஒரு பொய்யர் என்று எவராலும் சொல்ல முடியாது. மற்றபடி, நான் அன்னாருடைய அந்தத் திருமுகத்தைக் காண்பதற்கே ஏங்கிக் கிடந்தேன். எனக்கு அதிக ஆதாரங்கள் தெரியாது என்று முன்ஷி ஸாஹிப் பதிலளித்தார்கள்.

இதைக் கூறிய பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

வழக்கறிஞர் எடுத்துரைத்துள்ளார். அவர் ஜமாஅத்தைச் சேராத மவ்லவி ஃபஸ்ல் தீன் என்ற ஒரு வழக்கறிஞர் ஆவார். ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் இர்ஃபானி அவர்கள் தமது 'ஹயாத்தே அஹ்மத்' என்ற நூலில் இதைப் பதிவு செய்துள்ளார்கள்.

' அன்னார் (அலை) உண்மையாளர் என்பதற்குச் சான்றாக விளங்கும் மற்றொரு மகத்தான ஒழுக்கச் சம்பவம் இந்த வழக்கின் போது வெளிப்பட்டது. அது என்னவென்றால், உண்மையின் மீது அன்னார் (அலை) கொண்டிருந்த நேசமாகும். மறைந்த வழக்கறிஞர் மவ்லவி ஃபஸ்ல் தீன் அவர்களின் வார்த்தைகளிலேயே அதனைத் தெரிந்துகொள்ளுங்கள். தேஷ் மற்றும் ஹிந்துஸ்தான் ஆகிய இரண்டு செய்தித் தாள்களின் ஆசிரியரும், எனது சமகாலத்தைச் சேர்ந்த கலப்பற்ற நண்பரான லாலா தீனா நாத் என்பவரிடம், மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் கூறியதைக் குறிப்பிடுகிறேன்.

லாலா தீனாநாத் என்பவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர். ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் இர்ஃபானி அவர்களின் நண்பர் ஆவார்.

அந்த வழக்கறிஞர் (மவ்லவி ஃபஸ்ல் தீன்) இவ்வாறு கூறினார்: மிர்ஸா ஸாஹிப் மீது எனது உள்ளத்தில் எவ்வளவு மகத்துவம் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? அன்னாரின் அந்தஸ்தையும், மரியாதையையும் நான் மிகவும் உயர்ந்ததாகக் கருதுகிறேன். ஒரு வழக்கறிஞராக, உளவியல் ரீதியாக அன்னாரது வாதங்களில் எனக்குச் சில கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அன்னாருக்கு புரிதலில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று நான் கருதினாலும் அன்னாரது வாதங்கள் உண்மை இல்லை என்று கருதினாலும், அன்னார் (அலை) ஒரு மிகச் சிறந்த மனிதர் என்பதில் சந்தேகமில்லை. ஒரு மாமனிதராகவும், ஆன்மிகவாதியாகவும் அன்னார் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறார். அன்னாரைப் பற்றிய இந்த நம்பிக்கை எனக்கு ஒரு சம்பவத்தின் மூலமே ஏற்பட்டது.'

அந்தச் சம்பவத்தை அவர் இவ்வாறு எடுத்துரைக்கிறார்:

'ஹகீம் குலாம் நபி மற்றும் வழக்கறிஞர் மவ்லவி ஃபஸ்ல் தீன் ஆகியோரை உங்களுக்குத் தெரியும்.

மேற்கூறப்பட்ட இந்த விஷயத்தை அந்த இந்து ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். இப்போது அவர் மவ்லவி ஃபஸ்ல் தீன் ஸாஹிப் கூறியதை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்:

வழக்கறிஞர் மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் அவர்களை நீங்கள் அறிவீர்கள். ஹகீம் ஸாஹிபின் இல்லத்தில் மாலையில் நண்பர்கள் கூடுவது வழக்கம். நானும் அங்கு செல்வதுண்டு. ஒருநாள் அங்கே நண்பர்கள் கூடியிருந்தபோது, ஏதேச்சையாக மிர்ஸா ஸாஹிபைப் பற்றிய பேச்சு வந்தது. ஒருவர் அன்னாரை எதிர்க்கத் தொடங்கினார்; ஆனால் அது மிகவும் தரம் தாழ்ந்த, கண்ணியமற்ற முறையில் இருந்தது. அப்போது மவ்லவி ஃபஸ்ல் தீன் ஸாஹிப் இதைக் கேட்டு மிகுந்த ஆவேசமடைந்தார். அவர் உணர்ச்சிவசப்பட்டு இவ்வாறு கூறினார்: 'நான் மிர்ஸா சாஹிபை பின்பற்றக் கூடியவன் அல்ல; அன்னாரது வாதங்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. அதன் காரணம் எதுவாகவும் இருக்கட்டும்; ஆனால் மிர்ஸா சாஹிபின் மகத்தான ஆளுமையையும், ஒழுக்கச் சிறப்பையும் நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்.

நான் ஒரு வழக்கறிஞர். பல்வேறு தரப்பு மக்கள் வழக்குகள் தொடர்பாக என்னிடம் வருகிறார்கள். ஆயிரக்கணக்கானவர்களை நான் பார்த்திருக்கிறேன். மற்ற வழக்கறிஞர்கள் மூலமும் ஆயிரக்கணக்கானோரை நான் கவனித்திருக்கிறேன். பகட்டுக்காகவோ அல்லது புகழுக்காகவோ இதை செய்ய மாட்டார்கள் என்று நாம் நம்பக்கூடிய மிக நல்ல மனிதர்கள் கூட, வழக்குகள் என்று வரும்போது, சட்ட ஆலோசனையின் அடிப்படையில் தமது வாக்குமூலத்தை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டால், எவ்விதத் தயக்கமுமின்றி அதனை மாற்றிவிடுகிறார்கள். ஆனால், எனது வாழ்நாளில் எந்தச் சூழலிலும் உண்மையின் நிலையிலிருந்து விலகாத ஒரு மனிதராக மிர்ஸா ஸாஹிபை மட்டும்தான் நான் பார்த்திருக்கிறேன்

. நான் அன்னாரது ஒரு வழக்கில் வழக்கறிஞராக இருந்தேன். அது அந்தப் பாதிரியார் ஹென்றி மார்ட்டின் கிளார்க் தொடர்ந்த அதே வழக்குதான். அந்த வழக்கிற்காக நான் ஒரு சட்டப்பூர்வமான வாக்குமூலத்தைத் ஆயத்தம் செய்து அன்னாரிடம் வழங்கினேன். அதை வாசித்துப் பார்த்த அன்னார், இதில் பொய் இருக்கிறதே என்று கூறினார்கள். அதற்கு நான், குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் சத்தியப்பிரமாணத்தின் கீழ் வருவதில்லை; சட்டப்படி அவர் தான் விரும்பியதைச் சொல்வதற்கு அவருக்கு அனுமதி உண்டு என்று கூறினேன். அதற்கு, தான் விரும்பியதைச் சொல்லலாம் என்று சட்டம் அனுமதி அளித்திருக்கலாம்; ஆனால் இறைவன் அதற்கு அனுமதி அளிக்கவில்லையே!; பொய் பேசுவதற்கு இறைவன் அனுமதி அளிக்கவில்லை;அது சட்டத்தின் நோக்கமும் அல்ல. எனவே, உண்மைக்கு மாறான எந்தவொரு வாக்குமூலத்தையும் அளிக்க நான் ஒருபோதும் தயாராக இல்லை. நான் உண்மையான விஷயத்தை மட்டுமே எடுத்துரைப்பேன் என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

வழக்கறிஞரான மவ்லவி ஸாஹிப் கூறுகிறார்:

'நான் அன்னாரிடம், நீங்கள் தெரிந்தே உங்களை நீங்களே ஆபத்தில் சிக்க வைத்துக் கொள்கிறீர்கள் என்று சொன்னேன். அதற்கு, சட்டப்பூர்வமான வாக்குமூலத்தை அளித்து, முறையற்ற ஆதாயம் பெறுவதற்காக எனது இறைவனை கோபமடையச் செய்வதுதான் என்னை நானே ஆபத்தில் சிக்க வைப்பதாகும்; எது நேர்ந்தாலும் சரி! என்னால் அவ்வாறு செய்ய முடியாது என்று அன்னார் (அலை) கூறினார்கள்.'

லாலா தீனா நாத் ஸாஹிப் என்ற பத்திரிக்கை ஆசிரியர் இந்தச் சம்பவத்தை ஷேக் யஃகூப் அலி இர்ஃபானி ஸாஹிப் (ரலி) அவர்களிடம் எடுத்துரைக்கும்போது, மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் கூறியதாகக் குறிப்பிட்டதாவது;

'இந்த வார்த்தைகளை மிர்ஸா சாஹிப் கூறியபோது எத்தகையதொரு வேகம் அன்னாரிடம் இருந்தது என்றால், அன்னாரது முகத்தில் ஒரு தனித்துவமான கம்பீரமும், உத்வேகமும் தென்பட்டது. இதைக் கேட்ட நான், தங்களுக்கு எனது வாதத்தினால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்று அன்னாரிடம் கூறினேன்.

அதற்கு, தங்களது வாதத்தினாலோ அல்லது வேறொருவரின் முயற்சியினாலோ எனக்குப் பயன் கிடைக்கும் என்று நான் ஒருபோதும் எண்ணியதில்லை; அதேபோல் எவருடைய எதிர்ப்பும் என்னை அழித்துவிடும் என்றும் நான் கருதவில்லை. எனது நம்பிக்கை அல்லாஹ்விடமே உள்ளது; அவன் எனது உள்ளத்தை பார்ப்பவன்; உலக நடைமுறைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே தங்களை வழக்கறிஞராக நியமித்தேன்; மேலும், தாங்கள் தங்கள் பணியில் நேர்மையானவர் என்பதை நான் அறிவேன்; அதனால்தான் தங்களைத் தேர்ந்தெடுத்தேன். இது வெறும் வெளிப்படையான ஒரு வழிமுறை மட்டுமே. இதை மேற்கொண்டே ஆக வேண்டும் என்பதால் நான் இதை மேற்கொள்கிறேன்; நான் தங்களைச் சார்ந்து இருக்கவில்லை என்று அன்னார் (அலை) பதிலளித்தார்கள்.'

மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் கூறுகிறார்: 'இந்த வாக்குமூலத்தைத்தான் நான் பரிந்துரைக்கிறேன் என்று நான் (மீண்டும்) கூறினேன். அதற்கு, வேண்டாம்! விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் நான் எழுதுகின்ற இந்த வாக்குமூலத்தையே சமர்ப்பித்துவிடுங்கள். இதில் ஒரு வார்த்தையைக் கூட மாற்ற வேண்டாம். தங்களது சட்டப்பூர்வமான வாக்குமூலத்தை விட இது அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நான் முழு உறுதியுடன் கூறுகிறேன். தாங்கள் பயப்படும் அந்த விளைவு ஏற்படாது; மாறாக, இன்ஷா அல்லாஹ் முடிவு நல்லதாகவே அமையும். ஒருவேளை, உலகத்தின் பார்வையில் முடிவு நல்லதாக இல்லாமல் எனக்குத் தண்டனை கிடைத்தாலும் சரி! அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஏனெனில், எனது இறைவனுக்கு நான் மாறு செய்யவில்லை என்ற திருப்தியுடன் நான் மகிழ்ச்சியாக இருப்பேன் என்று மிர்ஸா சாஹிப் அவர்கள் கூறினார்கள்.'

லாலா தீனா நாத் கூறுகிறார்: 'மவ்லவி ஃபஸ்ல் தீன் ஸாஹிப் மிகுந்த உணர்ச்சியோடும் கலப்பற்ற தன்மையுடனும் மிர்ஸா சாஹிப் தரப்பு நியாயத்தை எடுத்து வைத்தார். மிர்ஸா ஸாஹிப் அவர்கள் உடனடியாகத் தமது வாக்குமூலத்தைத் தாமே எழுதிக் கொடுத்தார்கள்; இறைவனின் வியத்தகு ஆற்றலைப் பாருங்கள்!

அன்னார் (அலை) கூறியபடியே, அந்த வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே விடுதலையானார்கள் என்றும் (மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப்) கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்தன்மையையும், உண்மைக்காக எந்தத் துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் துணிச்சலையும், வீரத்தையும் மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் எடுத்து வைத்த விதம், அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் ஒரு மெய்சிலிர்க்கும் உணர்வை ஏற்படுத்தியது. அங்கு அமர்ந்து அன்னாரை எதிர்த்துக் கொண்டிருந்த அனைவரும் அமைதியாகிப் போனார்கள். அப்போது சிலர் அவரிடம், அப்படியானால், நீங்கள் ஏன் அன்னாரை பின்பற்றுபவராக மாறவில்லை என்று கேட்டனர். அதற்கு அவர், அது எனது தனிப்பட்ட விஷயம்; அதைப் பற்றிக் கேள்வி கேட்க உங்களுக்கு உரிமை இல்லை. ஆனால், அன்னாரை நான் ஒரு முழுமையான உண்மையாளராக நம்புகிறேன்; எனது உள்ளத்தில் அவருக்கு மிகப் பெரிய மரியாதை உண்டு என்று பதிலளித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மாஸ்டர் நஸீர் ஹுஸைன் சாஹிப் அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அவர்கள் கூறுகிறார்கள்

உயர்நீதிமன்ற வழக்கறிஞராக இருந்த மர்ஹூம் மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது மிகுந்த பற்று கொண்டிருந்தார். அவர், பொதுவாக ஹுஸூர் (அலை) அவர்களின் வழக்குகளில் ஆஜராகி வந்தார். அவர் என்னிடம் கூறுகையில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மிக உயர்ந்த தரத்திலான, ஒரு முழுமையான உண்மையாளராக நம்பினார். நான் விசாரித்தபோது அவர் ஹுஸூர் (அலை) அவர்களின் ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் டெபுடி மார்ட்டின் கிளார்க்கிற்கும் இடையிலான அந்த வழக்கில் நாங்கள் ஆஜராகியிருந்தோம். அப்போது அப்துல் ஹமீது என்ற நபர், மார்ட்டின் கிளார்க்கைக் கொலை செய்ய மிர்ஸா ஸாஹிப்தான் என்னை அனுப்பினார் என்று வாக்குமூலம் அளித்தார். அப்போது லாகூரைச் சேர்ந்த வழக்கறிஞர் மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் அவர்கள், ஒரு வழக்கறிஞர் என்ற அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம்,

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அவர்களின் நினைவில் முன்ஷி ஸாஹிப் அவர்கள் எந்தளவு கலங்கிப்போனார்கள் என்றால், அவர்கள் தேம்பித் தேம்பி அழத் தொடங்கிவிட்டார்கள். அழுது அழுது அவர்களுக்கு தொடர்ந்து விக்கல் வந்து விட்டது.

அப்போது அந்த நேர்காணலை எடுத்துக்கொண்டிருந்த Mr. வால்ட்டரின் நிலை எவ்வாறு இருந்ததென்றால், அவரது உடலில் ரத்தமே இல்லாதது போல் முகம் வெளிறிப்போனது. துவைத்த வெண்மையானத் துணியைப் போல அவரது முகம் மாறிவிட்டது. பின்னர் அவர் தனது 'அஹ்மதிய்யா மூவ்மென்ட்' என்ற நூலில் இந்தச் சம்பவத்தைப் பற்றித் தனித்துவமாகப் பதிவு செய்துள்ளார். அவர் அதில், தமது சகவாசத்தில் இத்தகைய மனிதர்களை உருவாக்கிய ஒருவரை, குறைந்தபட்சம் ஓர் ஏமாற்றுக்காரர் என்று எவராலும் சொல்ல முடியாது என்று எழுதியுள்ளார்.'

ஹஸ்ரத் மியான் ரஹீம் பக்ஷ் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'முஹம்மது இப்ராஹீம் என்ற ஓர் அஹ்மதியை நான் சந்தித்தேன். அவரோடு சில விஷயங்களைப் பேசிய பிறகு, நான் (ஜமாஅத்தை) ஒப்புக் கொண்டேன். அன்று இரவு எனக்கு ஒரு கனவு வந்தது. அதில் நாங்கள் நான்கு சகோதரர்களும் ஒரு மலையிலுள்ள குகையில் வழிதெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தோம். நான் ஒரு வழியாக மலையின் உச்சிக்கு ஏறி வந்துவிட்டேன். அங்கே ஒரு ரயில் வண்டி ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டேன். ஆனால் அது தரையிலிருந்து மிக உயரத்தில் இருந்தது. அதன் மீது எவ்வாறு ஏறுவது ? என்று நான் மலைத்து நின்றபோது, மேலே நின்றிருந்த ஒருவர், 'வானத்திலிருந்து ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருக்கிறது, அதைப் பிடி; அப்போதுதான் உன்னால் மேலே ஏற முடியும்' என்று கூறினார்.

கனவில் இந்த முழுக்காட்சியையும் அவர் கண்டார். அவர் தொடர்ந்து கூறுகிறார்:

மறுநாள் காலை இப்ராஹீம் சாஹிப் என்னைச் சந்திக்க வந்தபோது, எனது கனவை அவரிடம் கூறினேன். அவர் திருக்குர்ஆனைத் திறந்து, **அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் (ஆலிஇம்ரான்: 104)** என்ற வசனத்தின் பொருளை எனக்கு விளக்கினார். உடனே நான் பைஅத் செய்வதற்கான கடிதத்தை எழுதிவிட்டேன். 'உங்கள் பைஅத் ஏற்றுக்கொள்ளப்பட்டது; ஆனால் கண்டிப்பாக ஒருமுறை காதியானுக்கு வாருங்கள்' என்று பதில் வந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்தோ அல்லது அன்னாரது செயலாளர் மூலமாகவோ எனக்குப் பதில் வந்தது. உடனே நான் காதியானுக்குப் புறப்பட ஆயத்தமானேன். அமிர்தசரஸ் ரயில் நிலையத்தில் படாலா செல்லும் ரயிலில் ஏறியபோது, என் அறையில் இரண்டு மூன்று சீக்கியர்கள் இருந்தனர். அவர்கள் மிகவும் முதியவர்கள். எங்கே செல்கிறாய்? என்று என்னிடம் கேட்டனர். நான், காதியானுக்கு என்றேன். மிர்ஸாவின் காதியானுக்கா? என்று அவர்கள் கேட்டனர்.

ஆம்! அங்கேதான் செல்கிறேன்; அவரைப் பற்றிச் சொல்லுங்கள்; அவர் எப்படிப்பட்டவர்? என்று நான் கேட்டேன். ஏற்கனவே கனவு கண்டு பைஅத் செய்திருந்த போதிலும், மேற்கொண்டு எனது உள்ளத்தின் திருப்திக்காக அவர்களிடம் கேட்டேன். அதற்கு, அவர் மிகவும் பிரபலம்; அவர் கடவுள் என்று வாதிடுகிறார் என்று அந்தச் சீக்கியர்கள் கூறினார்கள்.

இறைவனிடமிருந்து இல்ஹாம் பெற்று மக்களை இறைவன் பக்கம் அழைக்கவே வந்துள்ளேன் என்பதே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதமாக இருந்தது.

எவ்வாறிருப்பினும், நான் ஏற்கனவே பைஅத் செய்திருந்தாலும், ஒரு குறும்பின் காரணமாக அவர்களிடம், 'எனக்கு மிர்ஸா ஸாஹிபைத் தெரியுமே! அவரும் எனது தந்தையாரும் சியால்கோட்டில் ஒன்றாக வேலை செய்தார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து 'பங்' எனும் ஒரு வகை போதையை உட்கொள்வார்கள் என்று நான் விளையாட்டாகக் கூறிவிட்டேன்.

ஆரம்பக் காலங்களில் ஈமானில் இத்தகைய பலவீனம் இருப்பதுண்டு.

எவ்வாறிருப்பினும், உடனே அந்தச் சீக்கியர்கள், தம்பி! அப்படி ஒருபோதும் சொல்லாதே! அவர் ஒரு துறவி போன்ற மனிதர் ஆவார்; மிகுந்த உண்மையாளரும், நம்பிக்கைக்குரியவரும் ஆவார்; மக்கள் அவரை ஒரு முன்மாதிரியாகக் குறிப்பிடுகிறார்கள். அவரது உண்மைத்தன்மை எந்தளவு பிரபலம் என்றால், எங்கள் பகுதியில் எவராவது உண்மையாகப் பேசினால் 'நீ என்ன மிர்ஸா குலாம் முர்தஸாவின் மகனா?' என்றுதான் கேட்பார்கள். அந்த அளவுக்கு அவர்களது உண்மை, நேர்மை எங்களுக்கு ஓர் உதாரணமாகிவிட்டது. அவர் சிறுவயதில் எங்களுடன் விளையாடியவர்; எங்களுக்குப் புத்தகங்களை வாசித்துக் காட்டுவார். அவர் காதியானின் தலைவரின் மகனாக இருந்ததால் நாங்கள் அவருக்கு மரியாதை அளித்தோம். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல அவர் மாறிக்கொண்டே போனார். ஒரு காலம் வந்தது, அவர் வெளியே வராமல் வீட்டுக்குள்ளேயே இருக்கத் தொடங்கினார்.

அதாவது தனிமையை மேற்கொண்டார்.

அவர் உள்ளே உட்கார்ந்து ஏதோ மாந்திரீகம் செய்கிறார் என்று நினைத்தோம். அந்த விவரம் தெரியாத மக்கள் இவ்வாறு எண்ணினார்கள். அவர்களுக்கு மார்க்கத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களைப் பொறுத்தவரை உள்ளே உட்கார்ந்து கொண்டு மாந்தரீகம் செய்கிறார் என்று நினைத்துக் கொண்டார்கள்.

காதியானைச் சுற்றி நான்கு மைல் தூரம் வரை மாந்தரீகம் செய்து விட்டார்.

அதாவது, தமது உண்மைத்தன்மையால் அனைவரையும் ஈர்த்துவிட்டார்கள்.

எந்த மதத்தைச் சேர்ந்தவர் அவரிடம் வந்தாலும், அவர் தனது மார்க்கமே உண்மை என்பதை நிரூபித்து, மற்றவர் மார்க்கம் பொய்யானது என்பதையும் நிரூபித்துவிடுவார். தான் வானத்திலிருந்து வந்ததாக அவர் கூறுகிறார் என்று அந்தச் சீக்கியர்கள் கூறினார்கள்.

அவர்கள் கூறியதைக் கேட்டுக்கொண்டே காதியான் வந்து சேர்ந்தேன். அங்குள்ள விருந்தினர் இல்லத்தில் மூன்று நான்கு சிறுவர்கள் இருந்தனர். நான் ஏற்றுக்கொண்டது சரிதானா? இல்லையா? என்று சோதிப்பதற்காக அந்தச் சிறுவர்களிடம் நான் கடுமையாகப் பேசினேன். ஆனால் எனது அநாகரீகமான பேச்சுக்கும் அவர்கள் மிகுந்த ஒழுக்கத்துடனும், கனிவுடனும் பதிலளித்தார்கள். அவர்களின் தர்பியத் எப்படி இருக்கிறது? என்று பார்த்தேன். நான் அவர்களிடம் மிகக் கடுமையாகப் பேசினேன்; ஆனால் அவர்கள் அதற்குப் பதிலாக மிகுந்த ஒழுக்கத்துடனும், மென்மையுடனும் என்னிடம் நடந்துகொண்டனர்.

நான், மிர்ஸா ஸாஹிபைச் சந்திக்க விரும்புகிறேன் என்றேன். அதற்கு அவர்கள், அன்னார் (அலை) இப்போது நடைப்பயிற்சிக்கு சென்றுள்ளார்; இப்போது சந்திப்பது கடினம் என்றார்கள்.

காதியானைச் சுற்றிப் பார்த்த அலைச்சலின் காரணமாக என் உள்ளம் பதற்றமடையத் தொடங்கியது. கடுமையான வெயிலின் காரணமாக திரும்பிப் போய்விடலாம் என்று எண்ணினேன்.

அப்போது அவர்களிடம் ஈமான் அந்தளவு உறுதியாகவில்லை.

வழியில் ஓர் அரேபியரைச் சந்தித்தேன். அவர் என்னிடம், சகோதரரே! நீங்கள் காதியானுக்கு வந்திருக்கிறீர்கள்; ஹஸ்ரத் ஸாஹிபை கண்டிப்பாக பார்த்து விட்டுச் செல்லுங்கள். இங்கே வந்த பிறகு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்துவிட்டுச் செல்லுங்கள். இத்தகைய காலம் மீண்டும் வாய்க்காது. மக்கள் வருவார்கள் போவார்கள். ஆனால் இத்தகையதொரு மனிதரை மீண்டும் பார்க்க முடியாது. வாய்ப்பிருக்கும்போதே சந்தித்துவிட்டுச் செல்லுங்கள் என்றார். ஆனால் நான் அதைப் பொருட்படுத்தாமல், குதிரை வண்டிக்காரரிடம் புறப்படு என்று சொன்னேன். வெயிலால் நான் சலிப்படைந்திருந்தேன். சந்திப்பும் நிகழவில்லை.




எவ்வாறிருப்பினும், அப்போது பாங்கு ஒலித்தது; சரி! தொழுதுவிட்டுப் போகலாம் என்று பள்ளிவாசலுக்குத் திரும்பினேன். அந்த அரேபியர் மீண்டும் அங்கே இருந்தார். அவர் என்னிடம், சகோதரரே! நீங்கள் ஹஸ்ரத் சாஹிபைப் பார்த்து விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காகவும், அல்லாஹ் உங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகவும் அப்போது முதல் நான் ஸஜ்தாவில் விழுந்து துஆ செய்து கொண்டிருந்தேன் என்று கூறினார்.

இது அந்த அரேபியரின் தூய அன்பாக இருந்தது. அவர் நான் செல்கிறேன் என்று கூறியபோது, இப்போது ஒரே ஒரு தீர்வுதான் உள்ளது; அல்லாஹ்வின் முன்னிலையில் ஆஜராகி சஜ்தாவில் விழுந்து விட வேண்டும் என்று அவர் எண்ணினார்.

அப்போதிருந்து நான் ஸஜ்தாவில் உள்ளேன். உங்களுக்காக துஆ செய்து கொண்டிருக்கிறேன்; நீங்கள் ஹஸ்ரத் ஸாஹிபை பார்த்து விட்டுச் செல்லுங்கள் என்றார்.

பிறகு, நான் ஹஸ்ரத் ஸாஹிபைக் கண்டேன். அன்னார் (அலை) சபையில் வந்து அமர்ந்தார்கள். நான் அன்னாருக்கு முன்னால் நின்றிருந்தேன். எனது தாடி மற்றும் மீசையை நான் முழுமையாக மழித்திருந்தேன்.

இது இக்காலத்து விஷயம் கிடையாது. அக்காலத்திலும் நாகரிகத்தை விரும்புபவர்கள் இவ்வாறு செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் ஸாஹிப் தலையைக் குனிந்தவாறு அமர்ந்திருந்தார்கள். அன்னாரது முகத்தைப் பார்க்கும் வரை எனக்கு முழுமையான உறுதி ஏற்படாது என்று என் மனதிற்குள் கூறிக் கொண்டேன். கடிதம் மூலம் நான் பைஅத் செய்திருந்தாலும், என்னால் முழுமையான உறுதியை அடைய முடியவில்லை. இன்னமும் கூட எனக்குள் அந்த சந்தேகம் இருந்து கொண்டுதான் இருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஸாஹிப் தம் முகத்தை உயர்த்திப் பார்த்தார்கள். அன்னாருடைய முகத்தைக் கண்டதும், அன்னார் (அலை) உண்மையாளர் என்று எனது உள்ளம் கூறியது. அன்னாரது முகத்தைக் கண்டபோது, இவர் ஓர் உண்மையாளர், என்று என் உள்ளத்திலிருந்து குரல் வந்தது.

பின்னர் சற்று நேரத்திற்குப் பிறகு அன்னார் தனது முகத்தை உயர்த்திப் பார்த்தபோது, **'ஆமன்னா' (நாங்கள் ஈமான் கொண்டோம்) என்றும் 'வசத்தக்னா'** (நாங்கள் அதனை உண்மை என ஏற்றோம்) தாங்கள் உண்மையாளர் என்றும் நான் கூறினேன். மூன்றாவது முறை அன்னார் (அலை) பார்த்தபோது, நான் அன்னாருக்காக என்னையே அர்ப்பணித்துவிட்டேன்.

. பிறகு தொழுகை நடந்தது. தொழுகை முடிந்ததும் ஹஸ்ரத் ஸாஹிப் உள்ளே செல்லத் தொடங்கினார்கள். ஒருவர் கதவருகே நின்று, ஹுஸுர்! எனக்காக துஆ செய்யுங்கள் என்று

வேண்டினார். அதற்கு, 'நீங்கள் எனது பைஅத்தில் இருக்கிறீர்கள்; நான் எதிரிகளுக்காகவும் துஆ செய்பவன் (அப்படியிருக்க உங்களுக்குச் செய்ய மாட்டேனா?) என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 362 - 363)

ஹஸ்ரத் கலீஃபா நிஸாமுத்தீன் ஸாஹிப் கூறுகிறார்கள்:

நான் சியால்கோட்டிலிருந்து சிந்து மாகாணத்திலுள்ள ஷிகார்பூருக்கு வேலை நிமித்தமாகச் சென்றிருந்தேன். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்கு எதிராகப் பெரும் எதிர்ப்புக் குரல்களை அங்கே கேட்டேன். பிறகு அமிர்தசரஸிலுள்ள எனது நண்பர்களைப் பார்க்க அங்கிருந்து வந்தேன். அங்கிருந்து சியால்கோட்டிற்குச் செல்லத் திட்டமிட்டிருந்தேன், ஆனால் நான் தூங்கிவிட்ட காரணத்தால் சியால்கோட் செல்லும் இரண்டு வண்டிகளும் தவறிவிட்டன. நான் கண் விழித்துப் பார்த்தபோது வண்டிகள் சென்றுவிட்டன என்று தெரிந்தது. உடனடியாக எனது உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றியது; மிர்ஸா ஸாஹிபின் ஊர் அருகில்தானே இருக்கிறது. ஒருமுறை அவரைப் போய்ப் பார்க்கலாமே! என்று எண்ணினேன்.

படாலாவுக்கு எப்போது வண்டி என்று விசாரித்தேன். அரை மணி நேரத்தில் வண்டி இருப்பதாக மக்கள் கூறினார்கள். நான் டிக்கெட் எடுத்துக் கொண்டு படாலா சென்றடைந்தேன். அங்கிருந்து கால்நடையாகவே காதியானுக்குச் சென்றேன். அஸர் தொழுகை நேரத்தில் நான் அங்குச் சென்று ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் ஸாஹிப்பைச் சந்தித்தேன்.

(ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்கள்) சியால்கோட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவரை அறிந்திருந்தார்கள். இவரும் சியால்கோட்டைச் சேர்ந்தவர்தான்.

என்னைப் பார்த்ததும் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். நாங்கள் அஸர் தொழுகையை நிறைவேற்றினோம். மறுநாள் காலை மௌலவி அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் என்னைப் பற்றித் தெரிவித்தார்கள். பள்ளிவாசலில் திறந்திருந்த ஒரு ஜன்னல் வழியாக ஹுஸுர் (அலை) அவர்கள் எனது பைஅத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஸாஹிபின் முகத்தைப் பார்த்த உடனேயே எனது உள்ளத்திற்கு ஒரு திருப்தி கிடைத்தது; இந்த உலகம் பொய்யாக இருக்கலாம்; ஆனால் இந்த முகம் ஒருபோதும் பொய்யாக இருக்க முடியாது! ஹுஸுர் அவர்களின் முகத்தில் ஒரு தனித்துவமான ஈர்ப்பு இருந்தது. அதில் வழிந்த ஒருவித ஒளி உள்ளங்களைக் கவரக்கூடியதாக இருந்தது.'

அதேபோல், ஹஸ்ரத் ஹகீம் அப்துர் ரஹ்மான் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'எனது தந்தையார் பைஅத் செய்த பிறகு, லாயல்பூர் மாவட்டத்திலுள்ள கோஜ்ராவில் பகுதி எண் 276 என்ற இடத்திற்குச் சென்றார். அந்தப் பகுதியில் அவர் தீவிரமாகத் தப்லீஃக் செய்தார். மக்கள் அவரைத் தங்களது இமாமாக ஏற்றுக்கொண்டனர். அவர் திருக்குர்ஆன் கற்பிக்கத் தொடங்கியபோது, ஈஸா (அலை) அவர்களின் மரணம் குறித்த விபரங்களை மிகவும் விரிவாக விளக்கினார். அதைக் கேட்டு மக்கள் ஆச்சரியமடைந்தனர். அங்கு வஸீர் தீன் என்ற ஒரு கிராமத் தலைவர் இருந்தார். ஒருநாள் அவர் ஹகீம் ஸாஹிபிடம், எனக்கு ஒரு பெரிய அண்டா தேவைப்படுகிறது என்றார்.

அங்கே செல்வந்தர்கள் பெரிய பெரிய அண்டாக்களில் உணவு சமைப்பார்கள். பொதுவாக ஏழைகளுக்கு உணவளிப்பதற்காக அல்லது தலைவர்கள் வீட்டில் நடக்கும் சில நிகழ்ச்சிகளுக்காக அவை சமைக்கப்படும்.

எவ்வாறிருப்பினும், அண்டா தேவைப்படுகிறது. குஜரன்வாலாவில் நல்ல அண்டாக்கள் ஆயத்தம் செய்யப்படுகின்றன. தாங்களும் என்னுடன் வாருங்கள்; அங்கிருந்து வாங்கிக்கொள்ளலாம் என்று அவர்கள் கூறினார்கள். அதற்கு நான், சிறந்த அண்டாக்கள் வாங்க வேண்டும் என்றால் நாம் படாலாவுக்குச் செல்வோம். அங்கேதான் மிகச் சிறந்தவை ஆயத்தம் செய்யப்படுகின்றன என்றேன். படாலாவை அடைந்தபோது, சௌத்ரி வஸீர் தீனிடம், இதோ அருகிலுள்ள காதியானில்தான் மிர்ஸா ஸாஹிப் வசிக்கிறார். நான் அன்னாரிடம் பைஅத் செய்துவிட்டேன்; அன்னார் (அலை) உண்மையாளர் ஆவார்கள்; தாங்களும் ஒருமுறை வந்து பாருங்கள் என்றேன். அதற்குச் சௌத்ரி ஸாஹிப், அன்னார் (அலை) கண்டிப்பாக உண்மையாளராகத்தான் இருப்பார்கள் என்பதற்கு நானே சாட்சி கூறுகிறேன் என்றார்.

சௌத்ரி ஸாஹிபுக்கு ஏற்கனவே அன்னாரை தெரிந்திருந்தது.

ஏனெனில் சியால்கோட்டில் நானும் மிர்ஸா ஸாஹிபும் ஒன்றாகப் பணியாற்றியவர்கள். நான் கிராம நிர்வாக அதிகாரியாக இருந்தேன்; அன்னார் (அலை) அலுவலகத்தில் வேலை செய்தார்கள் என்று கூறினார்.

ஹகீம் ஸாஹிபுடன் அண்டா வாங்க வந்த அந்தச் சௌத்ரி ஸாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றிய பேச்சு வந்தவுடன், ஆம்! அன்னார் (அலை) கண்டிப்பாக உண்மையாளராகத்தான் இருப்பார்கள். அன்னார் (அலை) அலுவலகத்தில் வேலை செய்வதை நான் கண்டுள்ளேன்; அன்னார் (அலை) ஒருபோதும் லஞ்சம் வாங்கியதில்லை; பொய் சொன்னதுமில்லை. அன்னார் (அலை) மிகுந்த இறையச்சமும் தூய்மையும் கொண்டவராக இருந்தார்கள். அத்தகைய ஒரு மனிதர் ஒருபோதும் பொய்யான வாதம் செய்ய மாட்டார். நான் அன்னாருடைய இளமைக் காலத்தைப் பார்த்திருக்கிறேன்; அன்னார் பொய்யராக இருக்க முடியாது. புறப்படலாம், நானும் உங்களுடன் வருகிறேன் என்று கூறினார்.

காதியான் சென்ற பிறகு சௌத்ரி ஸாஹிப் உடனே பைஅத் செய்து விட்டார்கள்.'

மியான் ஃபிரோஸ்தீன் ஸாஹிப் கூறுகிறார்கள்: 'எனது பாட்டனாரின் பெயர் மியான் நிஸாம் தீன். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் சியால்கோட்டில் பணியில் இருந்தபோது, எனது பாட்டனார்தான் 'சாலூ குஜ்ஜர்' என்ற பகுதியில் அன்னாருக்கு ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்துக் கொடுத்தார். ஹுஸுர் (அலை) அவர்கள் எனது பாட்டனார் மூலம் ஆறு மாஷா எடையுள்ள ஒரு தங்க மோதிரத்தைச் செய்து தமது வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். எனது பாட்டனாருடன் ஹுஸுர் அவர்களுக்கு மிகவும் நெருக்கமானத் தொடர்பு இருந்தது.

ஹுஸுர் (அலை) அவர்கள் மஸீஹ் என்று வாதிட்டபோது, எனது பாட்டனார் சிறிது காலத்திற்குப் பிறகு பைஅத் செய்தார். அவர் தனது குடும்பத்தினர் அனைவரையும் அழைத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இங்குப் பணியில் இருந்த காலம் முதலே எனக்கு அன்னாரைத் தெரியும். எனவே நீங்கள் அனைவரும் எனக்கு முன்னாலேயே பைஅத் செய்துவிடுங்கள். இந்த முகம் பொய்யர்களுடைய முகமாக இருக்க முடியாது என்று கூறினார். 1892-ல் எங்களது முழு குடும்பமும் பைஅத் செய்தது. (ரிவாயத்தே அஸ்ஹாப் அஹ்மது, தொகுதி 4, பக்கம் 374)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்:

'முன்ஷி அப்துல் அஸீஸ் ஸாஹிப் ஔஜ்லவி என்பவர் இவ்வாறு கூறினார்:

நான் 1890-களில் குருதாஸ்பூர் வட்டத்தில் ஜகத்பூர் கோஹ்லியான் என்ற கிராமத்தில் கிராமக் கணக்கராக இருந்தேன். 1891-ல் முயற்சி செய்து அதே வட்டத்தில் சேக்வான் என்ற கிராமத்திற்கு மாறுதல் பெற்றுச் சென்றேன். அப்போது நான் அஹ்மதியாக இருக்கவில்லை; ஆனால் ஹஸ்ரத் ஸாஹிபைப் பற்றி கேள்விப்பட்டிருந்தேன். எனக்கு அன்னார் (அலை) மீது எதிர்ப்பு எதுவுமில்லை; எனினும் ஆலிம்கள் அனைவரும் அன்னாருக்கு எதிராக இருக்கிறார்களே என்ற எண்ணமே என்னை தடுத்துக் கொண்டிருந்தது.

சேக்வான் சென்ற பிறகு மியான் ஜமால் தீன், இமாம் தீன் மற்றும் கைர் தீன் ஆகியோருடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது. அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் எழுதிய இஸாலயே அவ்ஹாம் என்ற புத்தகத்தை படிக்கக் கொடுத்தார்கள். நான் துஆ செய்த பிறகு அந்தப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினேன். அதை வாசித்துக் கொண்டிருக்கும் போதே, ஹஸ்ரத் ஸாஹிபின் உண்மைத்தன்மை ஓர் ஆணியைப் போல எனது உள்ளத்தில் பதிந்து விட்டது; எனது சந்தேகங்கள் அனைத்தும் நீங்கின. அதற்கு சில நாட்களுக்குப் பிறகு நான் மியான் கைர் தீனுடன் காதியானுக்குச் சென்றேன். அங்கே வட்ட அறை அருகே முதன்முதலாக ஹஸ்ரத் ஸாஹிபைக் கண்டேன். அன்னாருடைய முகத்தைக் கண்டதும் மியான் கைர் தீனிடம், இந்த முகம் பொய்யர்களுடைய முகம் அல்ல என்று கூறினேன். எனவே நான் பைஅத் செய்து விட்டேன். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, பாகம் 3, பக்கம் 617. அறிவிப்பு எண்: 659)

அதேபோல் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப், ஹஸ்ரத் சௌத்ரி ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் எடுத்துரைத்த இன்னோர் அறிவிப்பை குறிப்பிடுகிறார்கள்:

'கண்ணியத்திற்குரிய சௌத்ரி ஸர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்கள் எழுத்துப்பூர்வமாக என்னிடம் தெரிவித்ததென்னவென்றால், நான் முதன்முதலாக லாகூரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கண்டபோது, எனது உள்ளத்தில் எந்தவொரு கொள்கை ரீதியான விமர்சனங்களும் இருக்கவில்லை. அந்தத் தருணத்தில் எனது உள்ளத்தில் ஏற்பட்ட ஒரே தாக்கம் - இந்த மனிதர் உண்மையாளர் ஆவார்; அவர் சொல்வது சத்தியம் என்பதுதான். அல்லாஹ் என் உள்ளத்தில் அன்னார் (அலை) மீது எத்தகைய ஓர் அன்பை ஏற்படுத்தினான் என்றால், அதுவே எனக்கு அன்னாரது உண்மைத்தன்மைக்கான அசல் ஆதாரமாக அமைந்தது.

அப்போது நான் ஒரு சிறுவனாக இருந்தபோதிலும், அன்று முதல் இன்றுவரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு வேறு எந்த ஆதாரமும் தேவைப்படவில்லை. பிற்காலத்தில் எனது ஈமானை உறுதிப்படுத்தும் பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்திருந்தாலும் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அன்னாருடைய அருளுக்குரிய முகத்தைக் கண்டுதான் ஏற்றுக் கொண்டேன். அந்தத் தாக்கமே அன்னாருடைய வாதங்கள் உண்மை என்பதற்கான மிகப் பெரிய சான்றாக இன்றும் என்னிடம் உள்ளது. அந்த வகையில், 1904 செப்டம்பர் 3-ம் தேதி நான் அன்னாரை முதன்முதலாகக் கண்ட அன்றே நான் அஹ்மதியாகிவிட்டேன் என்றே கருதுகிறேன்.

அதேபோல் ஹஸ்ரத் மியான் ஸத்ருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'நான் பைஅத் செய்தபோது எனது தந்தையிடம், மக்கள் ஏன் குதிரை வண்டிகளில் ஏறி காதியானுக்குச் செல்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டேன். அதற்கு அவர் எனக்குத் தெரியாது என்றார்.

நான் சொன்னேன்: மிர்ஸா ஸாஹிப் தம்மை மஸீஹ் மவ்வூது என்று கூறுகின்றார்கள். அதற்கு

எனது தந்தை, அது உண்மையாகத்தான் இருக்கும்; நான் அந்த மனிதரைச் சிறுவயதிலிருந்தே பார்த்திருக்கிறேன்; அவர் தவறாகச் சொல்ல மாட்டார் என்றார்.

(ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 93-94)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'இப்போது பாருங்கள்! உங்கள் மீது அல்லாஹ் தனது அத்தாட்சியை எவ்வாறு பூர்த்தி செய்திருக்கிறான் என்றால், எனது வாதத்தின் மீது ஆயிரக்கணக்கான சான்றுகளை நிலைநாட்டி, நீங்கள் சிந்தித்துப் பார்ப்பதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளான். இந்த இயக்கத்தின் பக்கம் உங்களை அழைக்கும் இந்த மனிதர் எந்தளவு ஞானம் கொண்டவர், எத்தகைய ஆதாரங்களை முன்வைக்கிறார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். எனது முந்தைய வாழ்க்கையில் எந்தவொரு குறையையோ, அவதூறையோ, பொய்யையோ அல்லது மோசடியையோ உங்களால் சுட்டிக்காட்ட முடியாது. ஏற்கனவே பொய் சொல்லியும் அவதூறு கற்பித்தும் பழகிய இந்த மனிதன், இப்போதும் பொய் சொல்லியிருப்பானோ என்று நீங்கள் எண்ணுவதற்கு இடமே இல்லை. உங்களில் எவராவது எனது வாழ்க்கை வரலாற்றில் ஏதேனும் ஒரு குறையைச் சுட்டிக்காட்ட முடியுமா? எனவே, ஆரம்பத்திலிருந்தே என்னை இறையச்சத்தில் நிலைநாட்டியது அல்லாஹ்வின் பேரருளாகும்; சிந்திப்பவர்களுக்கு இதுவே ஒரு சான்றாகும்.

(தத்கிரத்துஷ் ஷஹாதத்தைன், ரூஹானீ கஸாயீன் தொகுதி 20, பக்கம் 64)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

'நினைவில் கொள்ளுங்கள்! உண்மை முழுமையாகத் தனது தாக்கத்தை வெளிப்படுத்தும்போது அது ஓர் ஒளியாக மாறிவிடுகிறது. அந்த ஒளியை ஏற்றுக்கொள்பவருக்கு, அது ஒவ்வோர் இருளிலும் வழிகாட்டியாக அமைந்து, அனைத்துத் துன்பங்களிலிருந்தும் அவரைக் காப்பாற்றுகிறது.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 140, 2022-ம் ஆண்டு பதிப்பு)


நாம் இந்த உண்மையை உணர்ந்து, உண்மையின் மீது நிலைத்திருப்பவர்களாகவும், எப்போதும் உயர்தரமான உண்மைத்தன்மையின் அடிப்படையில் செயல்படுபவர்களாகவும் திகழ அல்லாஹ் நமக்குத் நல்வாய்ப்பு வழங்குவானாக!(அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல், மே 29, 2026, பக்கம் 2 - 7) * * * * * * * * * *


Proprietor off : 044- 2260 1886

RAZIK XEROX & TELECOM

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET, ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


1- ம் பக்கத் தொடர்ச்சி.........

## (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பொன் மொழிகள்.....)

வாங்கியுள்ளேன். அந்த நேரத்திலிருந்து தற்போது வரை நான் உங்களில் யாரேனும் ஒருவர் பைஅத் வாங்குவதற்குத் தகுதியானவர் இருந்தால், நான் இந்தத் தலைமையை அவரிடம் ஒப்படைத்துவிட்டு, நான் பொறுப்பிலிருந்து விலகிவிடுவேனே? என்றே சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஆனால், நான் ஆழமாகச் சிந்தித்தப் பிறகும் கூட என்னைத் தவிர உங்களில் தகுதியான எவரும் எனக்குத் தென்படவில்லை.

எனவே, மக்களே! நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்; நான் இந்த பதவிக்குத் தகுதியானவன் அல்ல. மேலும், என் தந்தையும், என் தந்தைவழிப் பாட்டனாரும் கூட இந்தப் பதவிக்குத் தகுதியானவர்கள் அல்ல என்பதையும் நான் கூற விரும்புகிறேன். என் தந்தை ஹுஸைன் (ரலி) அவர்களை விடவும் கீழான அந்தஸ்தில் இருந்தார். அலீ (ரலி) அவர்கள் தமது காலத்தில், அந்தப் பதவிக்கு அதிக தகுதி படைத்தவராக இருந்தார். அவருக்குப் பிறகு, என் பாட்டனார் மற்றும் தந்தையைக் காட்டிலும் ஹஸன் (ரலி) மற்றும் ஹுஸைன் (ரலி) ஆகியோர் கிலாஃபத்திற்கு அதிக தகுதி படைத்தவர்களாக இருந்தனர். இதனால்தான் நான் இந்தப் பொறுப்பிலிருந்து விடுபடுகிறேன்.'

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம், தொகுதி 15, பக்கம் 557 முதல் 588 வரை)

ஒருமுறை ஷியா பிரிவைச் சேர்ந்த ஒரு நண்பர், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைச் சந்திப்பதற்காக வருகை தந்திருந்தார். அன்னார் (ரலி) அவரிடம் கூறினார்கள்:

'நீங்கள் ஷியா பிரிவைச் சேர்ந்தவர் ஆவீர்கள்; இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களுடன் எப்படியெல்லாம் நடந்து கொள்ளப்பட்டதோ அதற்கு அல்லாஹ் எப்படிப் பழி வாங்கினான்? என்று நீங்கள் பாருங்கள்! யஸீத் இறந்த பிறகு அவர் மகன் அரசனாக்கப்பட்டார். அவர் செய்த முதல் காரியம் இதுவாக இருந்தது. அதாவது, அவர் மக்களை ஒன்று திரட்டி கூறினார்:

மக்களே! நீங்களோ என்னை அரசனாக்கியுள்ளீர்கள். ஆனால் நான் இதற்குத் தகுதியானவன் அல்ல. என்னை விடத் தகுதியானவர்கள் பலர் இங்கு உள்ளனர். நீங்கள் அவர்களை அரசனாக்கிக் கொள்ளுங்கள்; அவர்களை நீங்கள் அரசனாக்கவில்லை என்றால், இதோ கிலாஃபத் இருக்கின்றது. அவர்கள் அவரை வற்புறுத்தினர். ஆனால், யஸீதின் மகன், மிகவும் நல்ல மனிதராக இருந்ததால், 'நான் இதற்குத் தகுதியானவன் அல்ல' என்று கூறிவிட்டார். அவர் வீட்டிற்கு வந்தபோது, அவரது குடும்பத்தினர், 'நீர் அவமானப்படுத்திவிட்டீர் என்று கூறினர். அதற்கு, 'நான் அவமானப்படுத்தவில்லை, மாறாக, கண்ணியப்படுத்தியுள்ளேன். இவ்வாறே அல்லாஹ் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களுக்காகப் பழிவாங்கிவிட்டான்' என்று அவர் கூறினார்.'(அல்-ஃபஸ்ல் தினசரி பத்திரிகை, ரப்வா, ஜுலை 05, 1960, பக்கம் 3)

* * * * * * * * * *

## குத்பா பேருரை (15.5.26)

12-ம் பக்கத் தொடர்ச்சி ....

வாழ்வில் இருந்ததே இல்லை.

ஓர் அறிவிப்பில் வருகிறது; அஸ்வத் என்பவர் அறிவிக்கிறார்கள்:

நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது இல்லத்தில் இருக்கும்போது என்ன செய்து கொண்டிருப்பார்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள், அன்னார் (ரலி) தமது குடும்பத்தினரின் வேலைகளில் ஈடுபட்டிருப்பார்கள் - அதாவது அவர்களின் வேலைகளில் உதவி செய்வார்கள். தொழுகைக்கான நேரம் வந்துவிட்டால், தொழுகைக்காகப் புறப்பட்டுச் சென்று விடுவார்கள் என்று கூறினார்கள்.

எனவே, வீட்டு வேலைகளிலிருந்து முற்றிலும் ஒதுங்கிவிடுகிற, அதன் காரணமாக மனைவிகள் குறை கூறுவதற்கும் முறையீடு செய்வதற்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிற ஆண்களுக்கு இதில் ஒரு படிப்பினை உள்ளது.

ஹிஷாம் பின் உர்வா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஒருவர் ஹஸ்ரத் ஆயிஷா அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வீட்டில் ஏதேனும் வேலை செய்வார்களா? என்று கேட்டார்.

அதற்கு அன்னார் (ஸல்), ஆம்! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது காலணிகளைத் தாமாகவே பழுது பார்ப்பார்கள்; தமது ஆடைகளைத் தாமாகவே தைத்துக் கொள்வார்கள்; உங்களில் ஒருவர் தனது வீட்டில் எவ்வாறு வேலை செய்வாரோ, அவ்வாறே அன்னாரும் வீட்டில் வேலை செய்வார்கள் என்று கூறினார்கள்.

அன்னாருடைய இந்த முன்மாதிரியைக் கண்டு ஸஹாபிகளும் தங்களது வீடுகளில் தமது மனைவியருக்கு ஒத்தாசையாக இருந்தனர் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. அதே நேரத்தில்,வீட்டு வேலைகளின் அசல் பொறுப்பு மனைவிகளுடையதுதான் என்பதும், இந்த விஷயத்தைக் கேட்டுவிட்டு அவர்கள் தங்களது கடமைகளிலிருந்து விடுபட்டுவிட்டதாகக் கருதக் கூடாது என்பதும் தெளிவாகிறது; எனினும் அவர்களுக்கு உதவி செய்வது ஆண்களின் கடமையாகும்.

மற்றோர் அறிவிப்பில் காஸிம் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் என்ன வேலை செய்வார்கள்என்று கேட்கப்பட்டபோது, அன்னார் மனிதர்களில் ஒரு மனிதராகவே திகழ்ந்தார்கள். தமது ஆடையைத் தாமே உதறி சுத்தம் செய்வார்கள்;தமது ஆட்டின் பாலைத் தாமே கறப்பார்கள்; மேலும் தமது வேலைகளைத் தாமே நிறைவேற்றிக் கொள்வார்கள் என்று கூறினார்கள்."

ஹஸ்ரத் அபூபர்தா (ரலி) அவர்கள் வழியாக வரும் மற்றோர் அறிவிப்பில் - இதற்கு முந்தைய அறிவிப்புகளைப் போன்றே இது இருந்தாலும் இதில் உள்ள கூடுதலான விஷயம் என்னவென்றால், அன்னார் (ஸல்) கம்பளி ஆடைகளை அணிவார்கள்; கால்நடைகளைக் கட்டி வைப்பார்கள்; விருந்தினர்களைக் கவனிப்பதற்காகத் தாமே நேரடியாகச் செல்வார்கள். விருந்தினர்களை உபசரிப்பதையும் தாமே செய்வார்கள்.

ஆடை தடிமனாகவோ, சொரசொரப்பாகவோ இருந்தாலும் எவ்விதத் தயக்கமுமின்றி அதனை அணிந்து கொள்வார்கள்; அன்னாருடைய ஆடை மிகவும் எளிமையானதாக இருந்தது என்று வருகிறது.

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபிஆ (ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒருவர் கூறினார்: நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் பள்ளிவாசலை நோக்கிப் புறப்பட்டேன். அப்போது அன்னாருடைய காலணியின் வார் அறுந்துவிட்டது. நான் அக்காலணியைப் பெற்று அதனைச் சரிசெய்ய முயன்றேன். ஆனால் அன்னார் (ஸல்) எனது கையிலிருந்து அந்தக் காலணியைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இது எனக்குத் தரப்படும் தனிச்சலுகையாகும்; எனக்கு இத்தகைய தனிச்சலுகை காட்டப்படுவதை நான் விரும்பவில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்னா பின் காலித் மற்றும் ஸுவாஃ பின் காலித் (ரலியல்லாஹு அன்ஹுமா) அறிவிக்கிறார்கள்:

அவர்கள் இருவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தபோது, அன்னார் (ஸல்) ஒரு சுவரையோ அல்லது தமது வீட்டையோ பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்; தமது கரங்களாலேயே அந்த வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

அதேபோல், ஸஹீஹ் புகாரியில் மஸ்ஜிதுந் நபவி கட்டப்பட்ட நிகழ்வு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகம் இரண்டு (அனாதைச்) சிறுவர்களுக்குச் சொந்தமான இடத்தில்போய் நின்றபோது, இந்த இடம் நமக்கு உகந்தது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அந்தச் சிறுவர்கள் அவ்விடத்தை விலைக்கு தர மறுத்தபோதிலும் (அன்னார் (ஸல்) இலவசமாகப் பெற விரும்பாமல்) அதற்கான முழு விலையையும் அவர்களுக்கு வழங்கினார்கள். பிறகு பள்ளிவாசல் கட்டுமானப் பணி தொடங்கியபோது, அன்னார் மக்களுடன் இணைந்து செங்கலைச் சுமக்கத் தொடங்கினார்கள்; பள்ளிவாசல் கட்டுமானத்தின் அனைத்து வேலைகளிலும் தாமும் பங்கெடுத்தார்கள்.'(**இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...**)(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், ஜுன் 5, 2026, பக்கம் 1 - 8) * * * * * * * * * * *

# ஜுமுஆ பேருரை

## பணிவு மற்றும் தாழ்மை குணம் ஆகியவற்றின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய நல்லொழுக்கம் தொடர்பாக மனம் கவர் பேருரை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 மே 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **15 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

உலகில் ஒரு முழுமையான மனிதர் எவரேனும் பிறந்திருக்கிறார் என்றால், அவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள்தான் என்பதில் நாம் முழுமையான நம்பிக்கையும், ஈமானும் கொண்டுள்ளோம். அன்னாருக்கு முன்னரும் அன்னாருக்கு நிகரான ஒரு முழுமையான மனிதர் பிறந்ததில்லை; இனி வருங்காலத்திலும் பிறக்கப்போவதில்லை. அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்றுவதாக இருக்கட்டும்; அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுவதாக இருக்கட்டும்; எல்லா விதமான நல்லொழுக்கங்களாக இருக்கட்டும்; மனித பண்புகளின் உயர்தரமான நிலைகளாக இருக்கட்டும்; இவை அனைத்தும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் ஒருங்கே அமைந்துள்ளன. எந்த ஒரு நல்லொழுக்கத்தை நீங்கள் எடுத்துக் கொண்டாலும், அன்னாருடைய வாழ்க்கையில் அதன் மிக உயர்ந்த முன்மாதிரி காணக்கிடைக்கும்;

அத்தகையதொரு தரம் வேறு எந்த மனிதரிடமும் இருந்ததில்லை; இனி இருக்கப்போவதும் இல்லை. அத்தகைய நல்லொழுக்கங்களில் ஒன்றுதான் பணிவு மற்றும் தன்னடக்கம் ஆகும். இதற்கான மிக மேலான உதாரணம் அன்னாரிடம் காணப்படுகிறது. ஒரு நம்பிக்கையாளர் எப்போதும் பணிவு எனும் நல்லொழுக்கத்தை தனது வாழ்வின் அங்கமாக மாற்றிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்று அன்னார் (ஸல்) தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு எப்போதும் அறிவுறுத்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த உயரிய நல்லொழுக்கம் குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில், إِنَّمَا أَنَا بَشَرٌ مِّثْلُكُمْ என்று அறிவிப்பு செய்யுமாறு கூறினான். அதாவது, நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே என்று அவர்களிடம் நீர் கூறிவிடுவீராக.

இறுதியான மற்றும் முழுமையான ஷரீஅத்தை கொண்டு வந்த நபி என்ற அந்தஸ்தை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்த போதிலும், நான் ஒரு மனிதன் ஆவேன்; ஓர் எளிய அடியான் ஆவேன் என்று பிரகடனம் செய்யுமாறே அல்லாஹ் அன்னாருக்குக் கட்டளையிட்டான்.

எவ்வாறிருப்பினும், இது தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் அன்னாருடைய இந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தும் சில நபிமொழிகளையும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களையும் நான் இன்று எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நமது நபி (ஸல்) அவர்களை விட உலகில் ஒரு முழுமையான மனிதரின் முன்மாதிரி (வேறெங்கும்) இல்லை; இனி மறுமை நாள் வரை இருக்கப் போவதுமில்லை. பாருங்கள்! அளப்பரிய அற்புதங்கள் கிடைத்த போதிலும் அன்னாருடைய நிலையோ எப்போதும் அடியார் என்ற நிலையிலேயே இருந்தது. அன்னார் ஓர் எளிய மனிதராகவும், ஓர் எளிய அடியாராகவும் வாழ்ந்தார்கள். எப்போதும்,

قُلْ إِنَّمَا أَنَا بَشَرٌ مِّثْلُكُمْ

(நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே) என்றே கூறி வந்தார்கள். எந்த அளவுக்கென்றால், ஏகத்துவக் கலிமாவில் அன்னார் (ஸல்) இறைவனுடைய அடியார் என்பதை ஏற்றுக்கொள்வதை ஒரு பிரிக்க முடியாத பகுதியாக அல்லாஹ் ஆக்கிவிட்டான். அதனை ஏற்காமல் ஒருவன் முஸ்லிமாகவே முடியாது.

சிந்தித்துப் பாருங்கள் ! மீண்டும் சிந்தித்துப் பாருங்கள்! மிக முழுமையான வழிகாட்டியின் வாழ்க்கை முறை நமக்கு எத்தகைய பாடத்தைக் கற்பிக்கிறது என்றால், இறை நெருக்கத்தின் மிக உயர்ந்த அந்தஸ்தை அடைந்த பிறகும் கூட, தாம் இறைவனின் அடியார் என்பதை ஒப்புக்கொள்வதை அன்னார் (ஸல்) கைவிடவில்லை எனும் போது, மற்றவர்கள் தங்களைப் பற்றி அவ்வாறு எண்ணுவதும், அத்தகைய விஷயங்களை மனதில் கொண்டு வருவதும் வீணானதும், தேவையற்றதுமாகும்."

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: 'வீண் பெருமைகளிலிருந்தும், தேவையற்ற ஆணவத்திலிருந்தும் நாம் விலகி இருக்க வேண்டும்; பணிவையும் தன்னடக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். பாருங்கள்! உண்மையில் அனைவரை விடவும் மேலானவராகவும், கண்ணியத்திற்கு தகுதி வாய்ந்தவராகவும் இருந்த ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பணிவு மற்றும் தன்னடக்கத்திற்கான ஒரு முன்மாதிரி திருக்குர்ஆனில் காணக்கிடைக்கிறது. ஒரு பார்வையற்றவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து திருக்குர்ஆனை கற்றுவந்தார். ஒரு நாள் மக்காவின் செல்வந்தர்களும் நகரத் தலைவர்களும் அன்னாரிடம் ஒன்று கூடி இருந்தார்கள். அவர்களுடன் பேச்சில் அன்னார் மூழ்கி இருந்தார்கள். அவர்களுடன் பேசுவதில் மும்முரமாக இருந்ததால் சிறிது தாமதமானது; இதனால் அந்தப் பார்வையற்றவர் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டார். இது ஒரு சாதாரண விஷயம்தான். ஆனால், அல்லாஹ் இது குறித்து ஒரு அத்தியாயத்தை இறக்கினான். ஆகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபரின் வீட்டிற்கே சென்று, அவரை அழைத்து வந்து, தமது அருளுக்குரிய போர்வையை விரித்து அதில் அவரை அமர வைத்தார்கள்.

உண்மை ம என்னவென்றால், யாருடைய உள்ளத்தில் இறைவனின் மகத்துவம் குடிகொண்டுள்ளதோ, அவர்கள் நிச்சயமாகப் பணிவுள்ளவர்களாகவும், தன்னடக்கமுள்ளவர்களாகவும் மாற வேண்டியுள்ளது. ஏனெனில் அவர்கள் இறைவனின் தன்னிறைவுத் தன்மையைக் குறித்து எப்போதும் அஞ்சி நடுங்குபவர்களாகவே இருக்கிறார்கள்.

எனவே, திருக்குர்ஆனோ அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோ எடுத்துரைத்த இந்தச் சம்பவங்கள் வெறும் ஒரு நிகழ்வு மட்டுமல்ல; மாறாக, நமக்குத் தரப்பட்ட ஒரு படிப்பினையாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி ஆவார்கள். அன்னாரை நேசிப்பதாக நீங்கள் வாதம் செய்கிறீர்கள் என்றால், நீங்களும் இத்தகைய பணிவு மற்றும் தன்னடக்கத்தின் உயரிய தரங்களை அடைய முயற்சி செய்ய வேண்டும் (என்பதே அந்த படிப்பினை ஆகும்).

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு நம்பிக்கை கொண்டவருக்குப் பணிவின் உண்மைத் தன்மையையும், அதனைச் செயல்படுத்துவதன் அவசியத்தையும் கவனமூட்டும் விதமாக ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்.

இதனை ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்;

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:'

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது தலையுடன் இரு சங்கிலிகள் பிணைக்கப்பட்டுள்ளன. ஒரு சங்கிலி வானத்தை நோக்கியும், மற்றொரு சங்கிலி பூமியை நோக்கியும் உள்ளது. ஓர் அடியான் பணிவையும் தன்னடக்கத்தையும் மேற்கொள்ளும்போது, வானத்துச் சங்கிலியைத் தன் கையில் வைத்திருக்கும் வானவர் அதனை மேலே உயர்த்துகிறார். அதாவது, அடியான் பணிவினால் கீழே குனியும்போது, அல்லாஹ் அவனுக்கு உயர்ந்த அந்தஸ்தை வழங்குகிறான். அவன் ஆணவம் கொண்டு வரம்பு மீறும்போது பூமியின் சங்கிலி அவனை கீழே இழுக்கிறது. ஆணவம் கொள்பவனின் எந்தவொரு செயலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அவன் அல்லாஹ்வின் பார்வையில் கீழே விழுந்தவனாக, தரையில் வீழ்ந்தவனாகவே கருதப்படுகிறான்.'

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்களிடமிருந்தே மற்றோர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது:

'ஓர் அடியார் பணிவைக் கடைப்பிடிக்கும்போது அல்லாஹ் அவரை ஏழாவது வானம் வரை உயர்த்தி விடுகிறான்.'

எனவே, நாம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற விரும்பினால் அதற்குப் பணிவு என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'தர்மம் செய்வதால் செல்வம் ஒருபோதும் குறைவதில்லை; பிறரை மன்னிப்பதன் காரணமாக ஓர் அடியானின் கண்ணியத்தை அன்றி வேறெதனையும் அல்லாஹ் அதிகரிப்பதில்லை. அதாவது மன்னிப்பதன் மூலம் கண்ணியம் உயர்கிறது. மேலும், எவர் இறைவனுக்காகப் பணிவை மேற்கொள்கிறாரோ, அவரை

அல்லாஹ் உயர்த்தி வைக்கிறான் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்."

இவ்வாறாக, ஒரு நம்பிக்கை கொண்டவருக்குத் தேவையான அடிப்படை விஷயங்களை அன்னார் (ஸல்) விளக்கியுள்ளார்கள். தர்மம் மற்றும் பொருள் தியாகத்தினால் செல்வம் குறைவதில்லை; மாறாக அது அதிகரிக்கிறது.

எனவே பொருள் தியாகம் செய்வதால் உங்கள் செல்வத்தில் குறைவு ஏற்படும் என்ற சந்தேகத்தை உள்ளத்திலிருந்து அகற்றிவிடுங்கள். அதேபோல், மன்னிப்பதாலும் சகிப்புத்தன்மையாலும் கண்ணியம் குறைவதில்லை; மாறாக அது உயர்கிறது. இந்த எதார்த்தத்தை மக்கள் உணர்ந்து கொண்டால், சமூகத்தில் நிலவும் எத்தனையோ சண்டைகளும், பிணக்குகளும் தீர்ந்துவிடும்.

பிறகு அன்னார் (அலை) கூறினார்கள்: பணிவை மேற்கொள்வதால் அல்லாஹ் மேன்மையை வழங்குகிறான். நீங்கள் எவ்வளவு பணிவாக இருக்கிறீர்களோ, அந்தளவுக்கு அல்லாஹ் உங்களுக்கு உயர்ந்த அந்தஸ்தை வழங்குவான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிவின் தரம் எத்தகையதாக இருந்தது என்பதைப் பற்றி இவ்வாறு வருகிறது;

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"ஒருமுறை ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, முஹம்மதே! எங்களது தலைவரே! தலைவரின் மகனே! எங்களில் சிறந்தவரே! சிறந்தவரின் மகனே!' என்று விளித்துக் கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், மக்களே! இறை அச்சத்தை உங்கள் மீது கடமையாக்கிக் கொள்ளுங்கள். ஷைத்தான் உங்களை வழிதவறச் செய்ய வேண்டாம். நான் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது; அல்லாஹ்வின் அடியானும் அவனது தூதரும் ஆவேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் எனக்கு வழங்கிய அந்தஸ்தை விட அதிகமாக நீங்கள் என்னைப் புகழ்ந்து பேசுவதை நான் விரும்பவில்லை என்று கூறினார்கள்.'

அல்லாஹ் அன்னாரின் மூலமாக எதனை அறிவிக்க வைத்தானோ, அதனைத் தமது நடைமுறை முன்மாதிரி மூலமாகவும் அன்னார் (ஸல்) நிரூபித்துக் காட்டினார்கள். அன்னாருடைய பணிவின் உச்சக்கட்டத்திற்கு மற்றுமோர் உதாரணம் ஹதீஸில் காணக்கிடைக்கிறது.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'எவருடைய செயலும் அவரைச் சொர்க்கத்தில் நுழைக்காது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன். அப்போது ஸஹாபிகள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களையுமா? என்று கேட்டனர். அதற்கு, ஆம்! என்னையும் கூடத்தான்; ஆனால், அல்லாஹ் தனது அருளாலும், கருணையாலும் என்னை மறைத்துக் கொண்டால் ஒழிய (எனது செயல்கள் மட்டும் என்னைக் காப்பாற்றாது);

எனவே, நீங்கள் செய்யும் எச்செயலையும் மிகவும் அழகிய முறையில் செய்யுங்கள்; அதனை இறை நெருக்கத்திற்காகவே நிறைவேற்றுங்கள். உங்களில் எவரும் மரணத்தை விரும்ப வேண்டாம். அவர் நல்லவராக இருந்தால், ஒருவேளை அவர் நற்செயல்களில் இன்னும் முன்னேறக்கூடும்; அவர் தீயவராக இருந்தால், ஒருவேளை அவர் தவ்பா செய்து அல்லாஹ்வின் கோபத்தை அகற்றக்கூடும் என்று அன்னார் (ஸல்) பதிலளித்தார்கள்."

பிறகு ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது;

ஹஸ்ரத் அபூ குதரீ அவர்கள் அறிவிக்கிறார்கள்; 'ஏழைகளை நேசியுங்கள்; ஏனெனில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது துஆவில், اَللّٰهُمَّ اَحْيِنِيْ مِسْكِيْنًا وَّ اَمِتْنِيْ مِسْكِيْنًا وَاحْشُرْنِيْ فِيْ زُمْرَةِ الْمَسَاكِيْنِ என்று கூறுவதை நான் கேட்டுள்ளேன்.

அதாவது: அல்லாஹ்வே! என்னை ஒரு மிஸ்கீனாக (எளியவனாக) வாழ வைப்பாயாக!; மிஸ்கீனாகவே எனக்கு மரணத்தைத் தருவாயாக!; மறுமையில் மிஸ்கீன்களின் கூட்டத்திலேயே என்னை எழுப்புவாயாக!

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கும்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதிகமாக இறைவனை நினைவு கூர்ந்து வந்தார்கள்; வீணான காரியங்களில் ஈடுபட மாட்டார்கள். தொழுகையை நீளமாகவும், குத்பாவை சுருக்கமாகவும் நடத்துவார்கள். ஏதேனும் ஒரு விதவை அல்லது ஏழை எளியவர்களுடன் நடந்து சென்று அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை அன்னார் (ஸல்) ஒருபோதும் கௌரவக் குறைச்சலாகக் கருதியதில்லை. இதுதான் அன்னாருடைய பணிவின் நிலையாகும். அன்னாருடைய இறை வணக்கத்தின் தரம் மிக உயர்ந்ததாக இருந்த அதே வேளையில், ஏதேனும் ஓர் ஏழை அல்லது விதவையின் குறைகளைக் கேட்பதற்கும் முழுமையான பொறுமையுடனும், நிதானத்துடனும் அவர்களுக்கு நேரம் ஒதுக்குவார்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

மதீனாவின் அடிமைப் பெண்களில் எவரேனும் ஒருவர் தனது தேவைகளுக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கையைப் பிடித்து எங்கு அழைத்துச் சென்றாலும் அன்னார் (ஸல்) அவர்களுடன் செல்வார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை சற்று மனநலம் குன்றிய ஒரு பெண்மணி வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு தங்களிடம் ஒரு வேலை உள்ளது என்று கூறினார். அதற்கு, இன்னாரே! மதீனாவின் எந்தத் தெருவில் நீ விரும்புகிறாயோ அங்கு அழைத்துச் செல்; உனது வேலை முடியும் வரை நான் உன்னுடன் இருப்பேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

பின்னர் அன்னார் (ஸல்) அவருடன் ஒரு பாதையில் சென்றார்கள்; அந்தப் பெண்மணி தனது தேவைகளை கூறி, தனது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வரை அன்னார் (ஸல்) அவருடன் நின்றார்கள்.

இப்பெண்மணியைப் பற்றிய அறிவிப்புகளில், அவரது பெயர் உம்மு ஸுஃபர் என்றும், அவர் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் பணியாளராக இருந்தார் என்றும் கூறப்படுகிறது."

அவரது புத்திசாதுரியம் சற்றே குறைவாக இருந்தது - அதாவது மிக அதிக புத்திசாலியாக இல்லாமல், சில சமயங்களில் விஷயங்களைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத ஒரு சிறிய குறைபாடு அவரிடம் இருந்தது. அதற்காக, அவர் முற்றிலும் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது பொருளல்ல - அல்லாஹ் பாதுகாப்பானாக! இருப்பினும் அவர் மிகுந்த புத்திசாலித்தனம் கொண்டவராக இருக்கவில்லை. ஆனால், அத்தகைய ஒரு பெண்ணின் உணர்வுகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கவனத்தில் கொண்டார்கள்.

மற்றோர் அறிவிப்பில் அதீ பின் ஹாத்திம் கூறுகிறார்கள்:

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சந்திப்பதற்காக மதீனா புறப்பட்டேன். அங்கு சென்று, பள்ளிவாசலில் நுழைந்து அன்னாரின் சமூகத்தில் ஆஜராகி ஸலாம் கூறினேன். யார் நீர்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதீ பின் ஹாத்திம் என்று நான் பதிலளித்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று, என்னை அன்னாருடைய வீட்டிற்கு அழைத்துச் செல்லத் தொடங்கினார்கள். செல்லும் வழியில் ஒரு வயதான பெண்மணி குறுக்கிட்டார்; அவர் நீண்ட நேரமாகத் தனது தேவைகளை அன்னாரிடம் முறையிட்டுக் கொண்டிருந்தார். அவருக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அங்கேயே நின்றிருந்தார்கள். இதனைக் கண்ட நான் என் மனதிற்குள், நிச்சயமாக இவர் ஓர் அரசர் அல்ல; ஏனெனில் அரசர்கள் ஏழைகளுக்காக இவ்வளவு நேரம் காத்து நிற்பதில்லை; அரசர்களிடம் இத்தகைய நற்பண்புகள் இருப்பதில்லை என்று எண்ணினேன்.

பின்னர் அன்னார் (ஸல்) என்னை தம் வீட்டிற்குள் அழைத்துச் சென்று, ஒரு தடித்த மெத்தையை எடுத்து என் பக்கம் போட்டு, இதில் அமருவீராக! என்று கூறினார்கள்.

அதாவது, வீட்டில் கிடந்த Cushion போன்ற ஒன்றை அந்த விருந்தினருக்கு கொடுத்தார்கள்.

தாங்களே இதில் அமருங்கள் என்று நான் கூறினேன். ஆனால், இல்லை! நீங்களே அமருங்கள்! என்று அன்னார் (ஸல்) கூறிவிட்டார்கள். இறுதியில் நான் அதில் அமர்ந்தேன். அன்னார் (ஸல்) தரையில் அமர்ந்தார்கள். அப்போது நான் மீண்டும் என் மனதிற்குள், இது ஒருபோதும் அரசர்களின் செயலல்ல; இது மிகவும் எளிய மனிதரின் செயலாகும் என்று நினைத்தேன்.

சிறுவர்களிடமும் அன்னார் (ஸல்) அன்பையும், பணிவையும் வெளிப்படுத்துபவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு ஸலாம் கூறுவதில் முந்திக் கொள்வார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்ஸாரைச் சந்திக்கச் சென்றால், அவர்களின் குழந்தைகளுக்கு ஸலாம் சொல்வார்கள்; அவர்களின் தலைகளைத் தடவிக் கொடுப்பார்கள்; அவர்களுக்காகப் துஆ செய்வார்கள்.

ஹஸ்ரத் இப்னு மஸ்வூத் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வந்தார்; அன்னார் அவருடன் பேசும்போது அன்னாருடைய ஆளுமையைக் கண்டு (அச்சத்தினால்) அவரது தோள்கள் நடுங்கத் தொடங்கின. அப்போது அன்னார் அவரிடம், நிதானமாக இருங்கள்; நான் ஒன்றும் அரசன் அல்ல; காய்ந்த இறைச்சியை உண்டு வாழ்ந்த ஒரு பெண்மணியின் மகன்தான் என்று கூறினார்கள்."

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'பாருங்கள்! நமது நபி (ஸல்) அவர்களின் வெற்றிகள் எப்படிப்பட்டவை என்றால், முந்தைய எந்தவொரு நபியிடமும் இதற்கான உதாரணம் காணக் கிடைக்காது. எனினும், அல்லாஹ் அன்னாருக்கு எந்த அளவு வெற்றிகளை வழங்கினானோ, அந்த அளவுக்கு அன்னார் (ஸல்) பணிவை கடைபிடித்துக் கொண்டே சென்றார்கள். ஒருமுறை ஒருவர் அன்னாருடைய சமூகத்திற்கு பிடித்துக் கொண்டு வரப்பட்டார்.

அவர் நடுங்கிக் கொண்டும், அச்சப்பட்டுக் கொண்டும் இருப்பதை அன்னார் (ஸல்) கண்டார்கள். அவர் அருகில் வந்ததும் அன்னார் (ஸல்) மிகுந்த மென்மையுடனும், கருணையுடனும் நீங்கள் ஏன் இப்படி அஞ்சுகின்றீர்கள்? இறுதியில், நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தானே! ஒரு பெண்மணியின் புதல்வன்தானே? என்று கேட்டார்கள்.'

வெளிப்படையான ஆடம்பரங்கள் மற்றும் பகட்டுகளை விட்டும் அன்னார் (ஸல்) மிகவும் மேலானவர்களாக இருந்தார்கள். இதற்கான உதாரணம் அன்னார் (ஸல்) மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது நடந்த சம்பவத்தில் காணக் கிடைக்கிறது. இதனை நாம் பலமுறை கேட்டிருக்கிறோம். மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யும்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்து

விட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டதும், முஸ்லிம்கள் தங்களது ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, ஹர்ரா என்னும் மைதானத்தில் அன்னாரை வரவேற்றார்கள். அன்னார் (ஸல்) அவர்களைத் தம்முடன் கூட்டிக்கொண்டு வலதுபுறமாகத் திரும்பி, பனூ அம்ர் பின் அவ்ஃப் கோத்திரத்தாரின் பகுதியில் அவர்களுடன் வந்திறங்கினார்கள். அது ஒரு திங்கட்கிழமை; ரபியுல் அவ்வல் மாதமாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களைச் சந்திப்பதற்காக எழுந்து நின்றார்கள்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். அன்ஸாரிகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அதுவரை பார்த்திராதவர்கள் வந்து, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஸலாம் சொல்லத் தொடங்கினார்கள். ஒரு கட்டத்தில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது வெயில் படத் தொடங்கியது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுந்து நின்று, தமது போர்வையினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நிழல் கொடுத்தார்கள். அந்த நேரத்தில்தான், அங்கு கூடியிருந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடையாளம் கண்டார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உரை மேடையில் நின்று கொண்டு, "கிறிஸ்தவர்கள் மர்யமின் மகனை அளவுக்கு அதிகமாகப் புகழ்ந்ததைப் போல, நீங்கள் என்னைப் புகழ்வதில் மிகைப்படுத்த வேண்டாம்; நான் அல்லாஹ்வின் ஓர் அடியான் மட்டுமே; எனவே, அல்லாஹ்வின் அடியான் என்றும் அவனது தூதர் என்றும் கூறுங்கள் என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன்" என்று கூறினார்கள்.

அதேபோல், அலீ பின் ஹுஸைன் அவர்கள் தமது தந்தை வழியாக அறிவிக்கிறார்கள்:

'இஸ்லாத்தின் மீதான அன்பின் காரணமாக எங்களை நேசியுங்கள்; ஏனெனில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறும்போது, எனது அந்தஸ்தையும், பதவியையும் அதன் உண்மை நிலையை விட அதிகமாக உயர்த்தி விடாதீர்கள்; ஏனெனில் அல்லாஹ் என்னை ஒரு தூதராக ஆக்குவதற்கு முன்பே, தனது அடியானாகவே ஆக்கியிருந்தான்என்று கூறினார்கள்.

எனவே இஸ்லாத்தின் மீதான பற்றினால் எங்களை நேசியுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்."

முதர்ரிஃப் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

எனது தந்தை என்னிடம் கூறினார்; நான் பனூ ஆமிர் கோத்திரத்தின் குழுவுடன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது நாங்கள் அன்னாரிடம், தாங்கள் எங்களது தலைவர் ஆவீர்கள்! என்று கூறினோம்.

அதற்கு, அன்னார் (ஸல்), தலைவன் அல்லாஹ் மட்டுமே என்று பதிலளித்தார்கள். பிறகு நாங்கள், தாங்கள் எங்களில் சிறப்பால் மிகச் சிறந்தவர்; பேருதவி செய்வதில் எங்களை விட மகத்தானவர் என்று கூறினோம். அதற்கு அன்னார், பேச வேண்டியதை பேசுங்கள் அல்லது உங்கள் விஷயத்தைப் பேசுங்கள்; ஷைத்தான் உங்களை துணிச்சல்காரர்களாக ஆக்கிவிடக் கூடாது என்று கூறினார்கள்.

இதுதான் அன்னாருடைய பணிவின் நிலை; உடனடியாகக் கண்டித்து, இத்தகைய விஷயங்களை விட்டுவிடுங்கள்; இது பின்னர் உங்களுக்குள் (பெருமையை) ஏற்படுத்தக்கூடும்; உங்களது உண்மையான நோக்கம் எதுவோ, எதற்காக வந்தீர்களோ அதனைப் பேசுங்கள்; எனக்காக இத்தகைய தவறான வார்த்தைகளைப் பேசாதீர்கள்! என்று கூறினார்கள். உண்மையில் அன்னாருக்காகப் பயன்படுத்தப்பட்ட அந்த சொற்கள் தகுதியானவையாக இருந்தபோதிலும் அன்னார் (ஸல்) அதனைத் தடுத்தார்கள்.

ஹஸ்ரத் ரபிஆ பின்த் முஅவ்வித் பின் அஃப்ரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் மணமுடித்து அனுப்பி வைக்கப்பட்டபோதுஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் வருகை தந்தார்கள். இப்போது நீங்கள் என் அருகில் அமர்ந்திருப்பதைப் போன்றே அன்னார் எனது படுக்கையின் மீது அமர்ந்தார்கள்.

அதாவது, அறிவிப்பாளர் யாரிடம் இதை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தரோ அவரிடம் கூறுகிறார்.

அப்போது எங்களது சிறுமிகள் சிலர் தம்பூரா வாசித்துக் கொண்டும், பத்ர் போரில் உயிர்த்தியாகம் செய்த எங்களது பெரியோர்களைப் புகழ்ந்து பாடிக் கொண்டும் இருந்தனர். அந்தப் பாடல்களுக்கிடையில் ஒரு சிறுமி, நாளை நடக்கப் போவதை அறிந்த ஒரு நபி நம்மிடையே இருக்கிறார் என்று பாடினார். உடனே அன்னார் அவரைத் தடுத்து, இதை விட்டுவிடு; இதற்கு முன்னர் நீ எதனைப் பாடிக்கொண்டிருந்தாயோ அதையே பாடு என்று கூறினார்கள்.

அதாவது, எனக்கு மறைவான அறிவு தெரியும் என்பது போன்ற வார்த்தைகள் தவறானவை; மறைவானவற்றை அறிபவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே என்று அன்னார் (ஸல்) தெளிவுபடுத்தினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

யாரும் என்னை யூனுஸ் பின் மத்தாவை விடச் சிறந்தவன் என்று சொல்ல வேண்டாம் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அன்னார் சிறந்தவராக இருந்தபோதிலும், இத்தகைய ஒப்பீடுகளைத் தடுத்து தமது மிக உயரிய பணிவை வெளிப்படுத்தினார்கள்.

அதேபோல் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒரு நபர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, யா கைரல் பரிய்யா படைப்பினங்களில் சிறந்தவரே என்று விளித்தார்.

அதற்கு அன்னார், அவர் இப்ராஹீம் (அலை) ஆவார்கள் என்று பதிலளித்தார்கள்."

உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே படைப்பினங்களில் சிறந்தவராக இருந்தார்கள்; இருக்கிறார்கள். தூதர்களில் மேலானவராகவும் இருக்கிறார்கள்; ஆயினும், அன்னார் (ஸல்) மிகுந்த பணிவினால் அந்தப் புகழை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் பக்கம் திருப்பி விட்டார்கள்.

அன்னாருடைய பணிவின் மற்றுமோர் உதாரணத்தை ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மூன்று முறை அழைத்தார்; ஒவ்வொரு முறையும் அன்னார் (ஸல்) லெப்பைக்! லெப்பைக்! - இதோ நான் ஆஜராகி விட்டேன்; நான் ஆஜராகி விட்டேன் என்று கூறினார்கள்.

ஏறத்தாழ அரேபியா முழுவதும் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு, அந்த அரேபியாவின் வெற்றியாளர் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தோழர்களுடன் ஹஜ் செய்தார்கள். அந்த நேரத்திலும் அன்னாருடைய எளிமை எவ்வாறிருந்தது என்பதை ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு சாதாரணமான ஒட்டகச் சேணத்தின் மீதும், நான்கு திர்ஹம்களுக்குச் சமமான - அல்லது அதைவிடக் குறைந்த மதிப்புள்ள - ஒரு மிகச் சாதாரணமான போர்வையைப் போர்த்திய நிலையிலுமே ஹஜ் செய்தார்கள். அப்போது அன்னார் (ஸல்)

اَللّٰهُمَّ حَجَّةٌ لَا رِيَاءَ فِيهَا وَلَا سُمْعَةَ

என்று துஆ செய்தார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! இந்த ஹஜ்ஜை எந்தவொரு பகட்டும் இல்லாமலும், புகழுக்கான தேடல் இல்லாமலும் ஆக்குவாயாக!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகழையும், அன்னாருடைய பெயர்களின் சிறப்பையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இரண்டு திருநாமங்கள் உள்ளன. அஹ்மது எனும் பெயர் அழகின் வெளிப்பாடாகும்; அதற்கு நேர்மாறாக முஹம்மது எனும் பெயர் கம்பீரத்தின் வெளிப்பாடாகும். இதற்கான காரணம் என்னவென்றால், முஹம்மது எனும் பெயரில் நேசிக்கப்படுதல் எனும் இரகசியம் பொதிந்துள்ளது.

அதாவது, அன்னார் (ஸல்) அல்லாஹ்வால் நேசிக்கப்படுபவர். ஏனெனில் அன்னார் (ஸல்) அனைத்துப் புகழ்களும் ஒருங்கே அமையப்பெற்றவர். மேலும், முழுமையான அழகைக் கொண்டிருப்பதும் அனைத்துப் புகழ்களின் இருப்பிடமாகத் திகழ்வதும் கம்பீரத்தையும், பெருமையையும் கோருகிறது. அன்னார் (ஸல்) அனைத்துப் புகழ்களின் தொகுப்பாக உள்ளார்கள்; அனைத்துப் புகழ்களின் மொத்த உருவமாக ஒருவர் திகழ்வது எப்போது சாத்தியமாகும் என்றால், அல்லாஹ்வின் கம்பீரமும் அவர் மீது வெளிப்பட்டு, அவரும் அதனை வெளிப்படுத்தும் போதும், அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருக்கும் அந்த உயர்ந்த அந்தஸ்து அவருடைய செயல்கள் மூலம் வெளிப்படும் போதும்தான்.

ஆனால், அஹ்மது என்ற பெயரில் நேசிக்கும் நிலை எனும் இரகசியம் மறைந்துள்ளது. இதில் அன்பின் நிறம் பொதிந்துள்ளது. ஏனெனில், இறைவனைப் புகழ்வதற்கு பணிவும், நேசத்திற்குரிய தாழ்மையும், எளிமையும் அவசியமாகும். இதனையே அழகின் நிலை என்று அழைக்கிறோம். அஹ்மது எனும் பெயர் அழகின் நிலையாக இருப்பதற்குக் காரணம், அதில் (இறைவன் மீதான) நேசம் காணப்படுகிறது; இந்த நிலை பணிவையும், தாழ்மையையும் வேண்டி நிற்கிறது."

தொடர்ந்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'நமது நபி (ஸல்) அவர்களிடம் நேசிக்கப்படும் தன்மையும் இருந்தது; அதன் தேவையை முஹம்மது எனும் பெயர் பூர்த்தி செய்தது. அன்னார் (ஸல்) இறைவனின் நேசராக இருந்தார்கள். அதாவது, அன்னார் (ஸல்) ஒட்டுமொத்தப் புகழ்களின் இருப்பிடமாக விளங்கியதால் இறைவனின் நேசத்திற்குரியவராகத் திகழ்ந்தார்கள். அதேபோல், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நேசிக்கும் தன்மையும் இருந்தது; அதன் காரணமாகவே அஹ்மது எனும் திருநாமம் அமையப்பெற்றது. ஒருவரைப் புகழ்பவர் நிச்சயமாக அவரை நேசிப்பவராக இருக்க வேண்டும். ஒருவர் மற்றவரை உண்மையான முறையிலும் முழுமையாகவும் புகழ்கிறார் என்றால், அவர் மீது அன்பு கொண்டவராக அல்லது நேசிப்பவராக இருக்கும்போதுதான் அது சாத்தியமாகும்.

ஒருவரின் நேசராக இருப்பதற்குப் பணிவு என்பது அவசியமான ஒன்றாகும்.ஒருவரிடம் அன்பு காட்டுவதைப் பணிவின் மூலமாகத்தான் வெளிப்படுத்த முடியுமே தவிர, கம்பீரத்தைக் காட்டி அன்பை வெளிப்படுத்த முடியாது. இந்த அழகிய நிலைதான் அஹ்மதின் உண்மைத் தன்மைக்கு இன்றியமையாததாக அமைந்துள்ளது.

முஹம்மது எனும் திருநாமத்தில் மறைந்திருந்த நேசிக்கப்படும் தன்மை ஸஹாபிகளின் வழியாக

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

வெளிப்பட்டது. அன்னாருடைய கண்ணியத்தைக் குறைக்க முயன்றவர்களையும், ஆணவத்தோடும் நடந்தவர்களையும் இறைநேசருடைய அந்த கம்பீரம் அடக்கி ஒடுக்கியது. அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் நேசத்திற்குரியவராக இருந்ததால், அல்லாஹ் தனது கம்பீரத்தையும் காட்டினான்; ஸஹாபிகளின் வாயிலாக அந்த கம்பீரத்தை வெளிப்படுத்தி எதிரிகளைத் தவிடுபொடியாக்கினான்.‘

இது குறித்து மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றோரிடத்தில் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பெயர்களில் உள்ள ஓர் இரகசியம் என்னவென்றால், முஹம்மது மற்றும் அஹ்மது ஆகிய இரு பெயர்களும் இரு வேறுபட்ட முழுமைகளைக் கொண்டுள்ளன. முஹம்மது எனும் பெயர் கம்பீரத்தையும், பெருமையையும் வேண்டி நிற்கிறது. ஏனெனில் அது மிக உயர்ந்த புகழப்பட்ட நிலையைக் குறிக்கிறது; இதில் ஒரு நேசிக்கப்படும் நிலை உள்ளது. ஏனெனில் நேசிக்கப்படுபவரே புகழப்படுகிறார். எனவே இதில் கம்பீரத்தன்மை இருப்பது அவசியமாகும். ஆனால் அஹ்மது எனும் பெயர் நேசிக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. ஏனெனில் புகழ்வது என்பது நேசிப்பவரின் வேலையாகும்; அவர் தனது நேசத்திற்குரியவரைப் புகழ்ந்து கொண்டே இருப்பார். எனவே முஹம்மது எனும் திருநாமம் நேசத்திற்குரிய நிலையில் கம்பீரத்தையும், பெருமையையும் நாடுவது போல், அஹ்மது எனும் திருநாமம் நேசிக்கக் கூடியவர் எனும் நிலையில் எளிமையையும், பணிவையும் நாடுகின்றது. இந்தப் பணிவு மற்றும் தன்னடக்கம் எனும் பண்பு அஹ்மது எனும் திருநாமத்தின் மூலமே வெளிப்படுகிறது.

இதில் உள்ள மற்றோர் இரகசியம் என்னவென்றால், அன்னாருடைய வாழ்க்கை இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அன்னாருடைய வாழ்க்கைக்கு இரண்டு பகுதிகள் இருந்தன; ஒன்று 13 ஆண்டுகால மக்கத்து வாழ்க்கை; மற்றொன்று 10 ஆண்டுகால மதீனத்து வாழ்க்கை. மக்கத்து வாழ்க்கையில் அஹ்மது எனும் திருநாமத்தின் ஒளி வீசியது. அக்காலத்தில் அன்னாருடைய பகலும் இரவும் அல்லாஹ்வின் முன் அழுது புலம்புவதிலும், அவனிடம் உதவி தேடுவதிலும், துஆ செய்வதிலுமே கழிந்தன. அன்னாருடைய பணிவும் எளிமையும் அன்னாருடைய ஆன்மாவோடு பின்னிப் பிணைந்திருந்தன.

பிற்காலத்திலும் இதே நிலை நீடித்த போதிலும், அந்த ஆரம்பக் காலத்தில் இந்தப் பண்பு மட்டுமே பிரதானமாக வெளிப்பட்டது. அன்னாருடைய அந்த மக்கத்து வாழ்க்கையை யாரேனும் முழுமையாக அறிந்திருந்தால் அவருக்குப் புரியும். நேசிப்பவர் தனது நேசரைத் தேடுவதில் எத்தகைய தவிப்பையும் அழுகையையும் வெளிப்படுத்துவாரோ, அத்தகைய ஒரு நிலையை அங்கே காண முடிந்தது; வேறு யாராலும் அத்தகைய தவிப்பை வெளிப்படுத்தவே முடியாது. அல்லாஹ்வின் மீதான நேசத்தில் தன்னைத்தானே அழித்துக் கொண்டு அன்னார் (ஸல்) அழுது அழுது வெளிப்படுத்திய அந்த நிலை ஓர் ஒப்பற்ற உதாரணமாகும். அன்னாருடைய முழு வாழ்க்கையுமே இத்தகைய பண்புகளால் நிறைந்திருந்த போதிலும், குறிப்பாக அக்காலம் இதற்குச் சான்றாகும்.

மேலும், அன்னாருடைய இந்த அழுகையும், புலம்பலும் தமக்காக இருக்கவில்லை; மாறாக உலகத்தின் அவல நிலையை முழுமையாக அறிந்திருந்த காரணத்தினாலேயே இருந்தது. இறைவணக்கம் என்பதன் அடையாளமே அழிந்து போயிருந்த நிலையில், அன்னாருடைய ஆன்மாவிலும், இயல்பிலும் அல்லாஹ்வின் மீதான ஈமானும் அதன் மூலம் கிடைத்த இன்பமும் ஊறியிருந்தது. எனவே இயல்பாகவே உலகத்தையும் அதே இன்பத்திலும், அன்பிலும் ஆழ்த்த அன்னார் (ஸல்) விரும்பினார்கள். ஒருபுறம் உலகத்தின் நிலையைக் கண்டார்கள்; அங்கே மக்களின் மனநிலையும் இயல்பும் விசித்திரமான முறையில் இருந்தன. பெரும் துன்பங்களையும் சோதனைகளையும் அன்னார் (ஸல்) எதிர்கொண்டார்கள்.

சுருக்கமாகக் கூறின், உலகத்தின் அவல நிலையை எண்ணி அன்னார் எத்தகைய அழுகையையும், கவலையையும் மேற்கொண்டார்கள் என்றால், அன்னாருடைய உயிர் பிரிந்து விடுமோ எனும் அளவுக்கு அது இருந்தது. இதனை சுட்டிக் காட்டியவாறே

لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ اَلَّا يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ

என்று அல்லாஹ் கேட்டுள்ளான். அவர்கள் நம்பிக்கையாளர்களாக ஆகவில்லையே என்று (கவலைப்பட்டு) உமது உயிரையே நீர் மாய்த்துக் கொள்வீரோ!

இது அன்னாருடைய பணிவான வாழ்க்கையாகும்; இது அஹ்மது எனும் திருநாமத்தின் வெளிப்பாடாகும். அக்காலத்தில் அன்னார் (ஸல்) ஒரு மகத்தான நோக்கத்தில் மூழ்கியிருந்தார்கள். அந்த நோக்கத்தின் உண்மையான வெளிப்பாடு அன்னாருடைய மதீனா வாழ்க்கையிலும் முஹம்மது என்ற திருநாமத்தின் ஒளியாக வெளிப்பட்டது. இதனை இந்த வசனத்தின் மூலம் அறியலாம். முதலாவது காலம் அஹ்மத் எனும் பெயரின் காலமாகும்; மதீனாவிற்கு வந்த பிறகு முஹம்மது எனும் ஒளியின் வெளிப்பாடு நிகழ்ந்தது. முன்பு குறிப்பிட்டது போல், ஸஹாபிகளின் வாயிலாகவும் எதிரிகள் அழிக்கப்பட்டார்கள். அதன் ஒளி வெளிப்பட்ட நேரத்தை

وَاسْتَفْتَحُوْا وَخَابَ كُلُّ جَبَّارٍ عَنِيْدٍ

எனும் இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் வெற்றிக்காக துஆ செய்தார்கள். அப்போது ஒவ்வொரு வரம்பு மீறியவனும், உண்மையை எதிர்த்தவனும் தோல்வியடைந்தான். மதீனாவிற்கு வந்த பிறகும் எதிரிகள் அநீதி இழைத்த போது, அங்கே முஹம்மது என்ற பெயரின் கம்பீரம் வெளிப்பட்டது; அப்போது ஒவ்வோர் எதிரியும் அழிந்து நாசமானான்.

وَاسْتَفْتَحُوْا وَخَابَ كُلُّ جَبَّارٍ عَنِيْدٍ

அவர்கள் அல்லாஹ்விடம் வெற்றியை வேண்டினார்கள். அல்லாஹ்வும் எதிரிகளின் மீது அன்னாருக்கு வெற்றியை வழங்கி அன்னாருடைய எதிரிகளை முற்றிலும் அழித்தொழித்தான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

‘ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நிலை, சில இடங்களில் எத்தகைய பணிவிலும் எளிமையிலும் அதன் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதாகத் தெரிகிறதோ, அதே அளவுக்கு அன்னார் (ஸல்) பரிசுத்த ஆவியின் உதவியாலும், ஒளியினாலும் ஆதரிக்கப்பட்டு, பிரகாசமடைந்துள்ளார்கள் என்பது புலனாகிறது. நமது நபி (ஸல்) அவர்கள் தமது நடைமுறை வாழ்க்கையின் மூலமாக இதனை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். அன்னாருடைய ஒளியும், அருளும் எந்த அளவு பரந்து விரிந்துள்ளது என்றால், இனிவரும் காலம் முழுமைக்கும் அன்னாருடைய முன்மாதிரியும் நிழலும்தான் வழிகாட்டியாகத் திகழும்; எப்போதும் இந்த முன்மாதிரி தான் தென்படும்.

எனவே, இக்காலகட்டத்திலும் அல்லாஹ்வின் எத்தகைய அருளும், கொடைகளும் இறங்குகின்றனவோ, அவை அனைத்தும் அன்னாருக்குச் செய்யும் கீழ்ப்படிதலாலும், அன்னாரைப் பின்பற்றுவதாலும் கிடைக்கப் பெறுகின்றன.

நான் உண்மையாகக் கூறுகிறேன்; எனது சொந்த அனுபவத்தைக் கொண்டு கூறுகிறேன்; எவரொருவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கவில்லையோ, அவர் உண்மையான நற்செயல் புரிபவராகவோ அல்லது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவராகவோ மாற முடியாது. மேலும், உயரிய முறையில் ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவதால் கிடைக்கும் வெகுமதிகள், அருட்கொடைகள், ஞானங்கள்,உண்மைகள் மற்றும் கஷ்ஃபுகளை அவரால் அடைய முடியாது. இதற்கான சான்று இறைவேதத்திலேயே காணக்கிடைக்கிறது;

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ

பொருள்: நீர் கூறுவீராக! மக்களே! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள்; அப்போது அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான். இறைவனின் இந்த வாதத்திற்கு நடைமுறை ரீதியான, உயிருள்ள சான்றாக நான் இருக்கிறேன்.”

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நானே இதற்கு நடைமுறைச் சான்று. நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிக்கிறேன். அதன் காரணமாகவே அல்லாஹ்வின் அருட்கொடைகள் என் மீது இறங்குகின்றன. திருக்குர்ஆனில் இறைநேசர்களுக்கும், வலியுல்லாக்களுக்கும் எத்தகைய அடையாளங்கள் குறிப்பிடப்பட்டுள்ளனவோ, அந்த அடையாளங்களைக் கொண்டு என்னை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

சுருக்கமாகக் கூறின், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நல்லொழுக்கங்களின் முழுமை எத்தகையது என்றால், ஒரு மூதாட்டி அன்னாருடைய கையைப் பிடித்து இழுத்துச் சென்றாலும் அன்னார் (ஸல்) அவருடன் செல்வார்கள்; அவர் சொல்வதை மிகுந்த கவனத்துடன் செவிமடுப்பார்கள்; அந்தப் பெண்மணி அன்னாருடைய கையைத் தானாக விடுவிக்கும் வரை அன்னார் (ஸல்) அதனை விடுவிக்க மாட்டார்கள்.‘

அன்னாருடைய பணிவு மற்றும் எளிமை குறித்து மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நோயாளிகளை நலம் விசாரிப்பார்கள்; ஜனாஸாக்களில் கலந்து கொள்வார்கள்; கழுதையின் மீதும் பயணம் செய்வார்கள்; ஒரு சாதாரணமான சவாரியாக இருந்தாலும் அதனை ஏற்பார்கள்; மேலும், அடிமையின் அழைப்பையும் ஏற்றுக் கொள்வார்கள். பனூ குறைஸா போரின் போது அன்னார் (ஸல்) ஒரு கழுதையின் மீது அமர்ந்திருந்தார்கள்; அதன் கடிவாளம் பேரீச்ச நாரினால் ஆன கயிற்றினால் செய்யப்பட்டிருந்தது. அதன் சேணமும் பேரீச்ச நாரினாலேயே செய்யப்பட்டிருந்தது. அதாவது, அது மிகச் சாதாரணமான ஒன்றாக இருந்தது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒருமுறை தமது குத்பாவில் இவ்வாறு கூறினார்கள்:

‘அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாம் பயணத்திலும் சரி! ஊரிலும் சரி! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருக்கும் நல்வாய்ப்பைப் பெற்றிருந்தோம். அன்னார் (ஸல்) எங்களது நோயாளிகளை நலம் விசாரிப்பார்கள்; எங்களது ஜனாஸாக்களுடன் வருவார்கள்; ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு வேலையிலும் அன்னார் (ஸல்) எங்களோடு இருப்பார்கள்.

அதேபோல் ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

‘ஆட்டின் சிறியதொரு முன்னங்கால் அல்லது பின்னங்காலை உண்பதற்காக நான் அழைக்கப்பட்டாலும், அந்த அழைப்பை நான் நிச்சயமாக ஏற்றுக் கொள்வேன்; மேலும், ஆட்டின் முன்னங்காலோ அல்லது பின்னங்காலோ எனக்கு அன்பளிப்பாக அனுப்பப்பட்டாலும் அதனை நான் மிக மகிழ்ச்சியோடு

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 02 JULY 2026 Issue No. 27

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

பெற்றுக் கொள்வேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்."

அதாவது மிகச் சாதாரணமான ஒரு விருந்தாகவோ அல்லது பரிசாகவோ இருந்தாலும் அதனை அன்னார் ஏற்றுக்கொள்வார்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு வாற்கோதுமை ரொட்டியும், பழைய கொழுப்பும் உணவாக வழங்கப்பட்டது; அந்த அழைப்பை அன்னார் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள்.

மற்றோர் அறிவிப்பில் அன்னாருடைய எளிய உணவு குறித்து இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது;

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை ஒரு தையல்காரர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தான் தயாரித்த உணவிற்கான விருந்திற்கு அழைப்பு விடுத்தார் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

நானும் அன்னாருடன் சென்றேன். அங்கே ரொட்டியும், இறைச்சித் துண்டுகளுடன் சுரைக்காய் சேர்த்த குழம்பும் பரிமாறப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கிண்ணத்தைச் சுற்றியிருந்த சுரைக்காய் துண்டுகளைத் தேடி எடுத்து உண்பதையும், இறைச்சியை விட்டு விடுவதையும் நான் கண்டேன். அன்றிருந்து எனக்கும் சுரைக்காய் மிகவும் பிடித்துப்போனது என்று ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

இங்கே நமது விருந்தினர்களுக்கும் நான் ஒரு செய்தியைக் கூற விரும்புகிறேன்; ஏனெனில் இது அவர்களுக்கும் ஒரு பாடமாகும். குறிப்பாக (ஆண்டு) மாநாட்டின் நாட்களில் விருந்தினர் இல்லத்தில் சிலர் ஆட்சேபனை செய்வதுண்டு - உருளைக்கிழங்கு மற்றும் இறைச்சி உள்ள குழம்பில் எங்களுக்கு உருளைக்கிழங்கு வேண்டாம்; இறைச்சி மட்டுமே வேண்டும் என்று கேட்கிறார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த அழகிய முன்மாதிரியை எப்போதும் உங்கள் முன் வைத்திருங்கள். உணவு என்பது ஒரு குறிப்பிட்ட அளவு விகிதத்தில்தான்சமைக்கப்படுகிறது; எனவே எது கிடைக்கிறதோ அதனை உண்ண வேண்டும். காய்கறியோ அல்லது இறைச்சியோ எது கிடைத்தாலும் அதனை விரும்பி உண்ண வேண்டும்.

மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பது மற்றும் தன்னடக்கம் குறித்து மற்றோர் அறிவிப்பில் ஓர் உதாரணம் காணக்கிடைக்கிறது.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தொழுநோய் பாதித்த ஒரு மனிதரின் கையைப்பிடித்து, அவரைத் தம்முடன் உணவுப் பாத்திரத்தில் சேர்த்துக் கொண்டார்கள். பிறகு, அல்லாஹ்வின் பெயரைக் கூறி, அவன் மீது நம்பிக்கை வைத்து உண்ணுங்கள் என்று கூறினார்கள்.

அதேபோல், ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு கழுதையின் மீது அமர்ந்திருந்தார்கள்; அதன் மீது ஃபதக் தேசத்துத் தயாரிப்பான ஒரு போர்வை விரிக்கப்பட்டிருந்தது.

அதாவது, அன்னார் (ஸல்) ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களைத் தமக்குப் பின்னால் அமர வைத்திருந்தார்கள். தமக்குப் பின்னால் இவர் அமர்ந்திருக்கிறார்; இவர் அமரவில்லை என்ற எவ்வித கௌரவப் பாகுபாடும் அன்னாருக்கு இருக்கவில்லை.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

குர்பானி தினத்தன்று ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஃபஸ்ல் பின் அப்பாஸைத் தமது ஒட்டகத்தின் பின்புறம் அமர வைத்துக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் அவர்கள் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவிற்குள் (வெற்றியாளராக) நுழைந்தபோது, மக்கள் அன்னாரைக் காணத் திரண்டனர். அப்போது பணிவின் காரணமாக, அன்னாருடைய தலை ஒட்டகச் சேணத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. சுற்றிலும் மக்கள் சூழ்ந்திருக்க, அந்த வெற்றியையும் முஸ்லிம்களின் பெருந்திரளையும்கண்டபோது, அன்னாருடைய தாடிப் பகுதி பணிவினால் சேணத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது அல்லது தொடும் நிலையை நெருங்கியிருந்தது. அப்போது அன்னார் (ஸல்)

اَللّٰهُمَّ اِنَّ الْعَيْشَ عَيْشُ الْاٰخِرَةْ

கூறினார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! நிச்சயமாக மறுமையின் வாழ்வே உண்மையான வாழ்வாகும்.

அன்னாருடைய நீதி, பணிவு, எளிமை ஆகியவற்றை எடுத்துக் காட்டும் மற்றுமோர் அம்சம் என்னவென்றால், குறைஷிகளின் தலைவர்களும் பனூ ஹாஷிம் கோத்திரத்தின் மகன்களும் அங்கே இருந்தபோதிலும், அன்னார் தம்மால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஸைத் பின் ஹாரிஸாவின் மகன் உஸாமாவையே பின்னால் தமது சவாரியில் அமர வைத்திருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

' அல்லாஹ்வின் குறிப்பான அடியார்களுக்கு வழங்கப்படும் உயர்வு என்பது பணிவின் வடிவத்திலேயே இருக்கும்; ஆனால் ஷைத்தானின் உயர்வு என்பது ஆணவத்தோடு கலந்திருக்கும். அதாவது அதில் பெருமை இருக்கும்.பாருங்கள்! நமது நபி (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்டபோது, அன்னார் (ஸல்) சோதனைகளும் இன்னல்களும் நிறைந்த மக்கா வாழ்க்கையின் நாட்களில் (இறைவனின் முன்னிலையில்) தமது தலையைத் தாழ்த்தி எவ்வாறு ஸஜ்தா செய்தார்களோ, அதேபோன்றுதான் தமது தலையைத் தாழ்த்தி ஸஜ்தா செய்தார்கள்.எந்த மக்காவில் தமக்கு எல்லா வழிகளிலும் எதிர்ப்புகளும் துன்பங்களும் தரப்பட்டனவோ, தாம் எந்த நிலையில் இங்கிருந்து வெளியேறி, இப்போது எந்த நிலையில் மீண்டும் இங்கு வந்துள்ளோமென்பதை அன்னார் (ஸல்) கண்டபோது, அன்னாருடைய உள்ளம் இறைவனின் நன்றியுணர்வால் நிறைந்தது; அன்னார் (ஸல்) இறைவனுக்கு சஜ்தா செய்தார்கள்.'

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் அவர்கள் மூலமாக ஓர் அறிவிப்பு வருகிறது: 'பத்ருப் போரின் போது ஒவ்வொரு மூன்று பேருக்கு ஓர் ஒட்டகம் என ஒதுக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் அபூ லுபாபா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சவாரித் தோழர்களாக இருந்தனர்.ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நடந்து செல்ல வேண்டிய முறை வந்தபோது, அவ்விருவரும், அல்லாஹ்வின் தூதரே! தங்களுக்குப் பதிலாக நாங்கள் நடந்து வருகிறோம்;தாங்கள் சவாரியில் அமர்ந்திருங்கள்என்று கூறினர். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நீங்கள் இருவரும் நடப்பதில் என்னை விட வலிமையானவர்கள் அல்ல; அதேபோல் (இறைவனிடம்) நற்கூலியைப் பெறுவதில் உங்களை விட நான் தன்னிறைவு பெற்றவனும் அல்லஎன்று பதிலளித்தார்கள்.'

மற்றோர் அறிவிப்பில் வருகிறது;"ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தார்கள். அப்போது உணவுக்காக ஓர் ஆட்டைத் தயார் செய்யுமாறு அன்னார் கட்டளையிட்டார்கள். ஒரு நபர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அதனை அறுக்கும் பொறுப்பு என்னுடையது என்றார்; இன்னொருவர், அதன் தோலை உரிக்கும் பொறுப்பு என்னுடையது என்றார். மற்றொருவர், அதனைச் சமைக்கும் பொறுப்பு என்னுடையது என்றார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விறகுகளைச் சேகரிக்கும் பொறுப்பு தன்னுடையது என்று கூறினார்கள். ஸஹாபிகள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் அந்த வேலையைச் செய்யப் போதுமானவர்களாக இருக்கிறோம் என்று கூறினர். அதற்கு அன்னார் (ஸல்), நீங்கள் போதுமானவர்கள் என்பதை நான் அறிவேன்; இருப்பினும், உங்களுக்கு மத்தியில் நான் ஒரு தனிச்சிறப்பானவனாக இருப்பதை நான் விரும்பவில்லை. ஏனெனில், ஓர் அடியான் தனது தோழர்களுக்கு மத்தியில் தன்னைத் தனித்துவமாகக் காட்டிக் கொள்வதை அல்லாஹ் விரும்புவதில்லை என்று கூறினார்கள். பிறகு அன்னார் எழுந்து சென்று விறகுகளைச் சேகரிக்கத் தொடங்கினார்கள்.

(சுருக்கமாகக் கூறின்.)

அன்னார் (ஸல்) தமது பணிவை மிகத் தெளிவான முறையில் வெளிப்படுத்தாத எந்தவொரு சந்தர்ப்பமும் அன்னாருடைய

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்...

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad